Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன 389

தபாற் பெட்டி எண. 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆவணி 28 ஆம் நாள் ரபி ஆகிர் 2 (13-9-61) புதனகிழமை இதழ் 1 1

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14,டாம் வீதி, கொழும்பு.

# ஆற்றில்வீசிய குழந்தை

## உயிர் தப்பிய அதிசயம்!

### நகையைப் பறித்து நதியில் எறிந்தான் பாவி!

### பெலியகோடையில் பரபரப்பு பொலிஸ் துப்பாக்கி வெடி

கொழும்பு, செவ்வாய்

4 வயதுப் பெண்குழந்தை ஒன்றை களனி ஆற்றிலே தூக்கி வீசினன் காதகன் ஒருவன். ஆனல் தெய்வாதீனமாகஅது உயிர்தப்பியது. அப்பச்சிளங் குழந்தை அணிந்திருந்த நகைகளைப் பறித்துக் கொண்டபின் அந்த வீசினன் அவன்.

இக் குழந்தை அவரது வீட்டிலிருந்து அகற்றப்பட்டது. குழந்தையைக் கொண்டுபோன மனிதன் குடும்ப நண்பனைப் போல் நடித்து இக் கிராதகச் செயலில் ஈடுபட்டான். அபாயகரமான நீரோட்டத்தினல் குழந்தை அடித்துச் செல்லப்பட்டது. ஆனல் கரையிலிருந்து ஆற்றினூடாக நீண்டிருந்த ஒரு மரக்கிளையை அது பிடித்துக் கொண்டு கதறி அழவே ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த சிலர் பாய்ந்து சென்று அதைக் காப்பாற்றினர்கள்.

குழந்தையைக் கடத்தியவனுக்கு 35 வயது இருக்குமென்றும், நீலநிறச் சட்டை அணிந்திருந்த அவனை இதற்குமுன் பார்த்ததில்லை என்றும் குழந்தையின் தாயார் கூறினர். இக்கதை பரவியதைக் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தைச் சுற்றி நூற்றுக்கணக்காேனர் கூடிவிட்டனர். கூட்டத்தைக் கலைக்க பொலிஸ் ஆகாயத்தை நோக்கிச் சுடவேண்டியிருந்தது. பேலியகொடை பொலிசார் இந்த நபரை இப்போது தேடிவருகிருர்கள்.

# விஷவைத்தியம் பாதுகாக்க கோரிக்கை

### மாநகரசபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொழும்பிலுள்ள திரு. மொறையிஸ் என்னும் விஷவைத்தியருக்கு அரசினர் செய்துகொடுக்கும் சலுகைகள் போல் யாழ்ப்பாணத்துக்கு மிகச்சிறந்த தொண்டுசெய்துவரும் விஷவைத்தியர் திரு. க. சிற்றம்பலத்துக்கும் செய்துகொடுக்கவேண்டுமென்று பிரதம மந்திரியையும், சுகாதார அமைச்சரையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்று யாழ்ப்பாணம் மாநகரசபையில் கொண்டுவரப்படவிருக்கிறது.

இம்மாதம் 15-ம் திகதி கொண்டுவரப்படவிருக்கும் இப்பிரேரணை சம்பந்தமாக பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பாம்புகடிக்கு மேல்நாட்டு வைத்தியமுறையில் சரியான மருந்துகிடையாது. கீழ்நாட்டு வைத்தியமுறையில் எந்தவித விஷகடிக்கும் சிறந்த வைத்தியமுறையுண்டு. இவ்வுபயோகமான வைத்தியம் அழிந்துபோகாதவாறு அரசினர் போதிய வசதிகளைச்செய்துகொடுத்துப் பாதுகாக்கவேண்டியது அவசியம்."

# விஞ்ஞான பட்டதாரிகளுக்கு பாஸ்போர்ட் பெறுவதில் கஷ்டம்

### செனட்டர் நடேசன் பிரஸ்தாபம்

கொழும்பு, செவ்வாய்

செனட்சபை சர் சிரில் டி' சொய்ஸா தலைமையில் கூடிய போது வெளிநாட்டில் உத்தியோகம் பெற முயன்ற யாழ்ப்பாணம் விஞ்ஞான பட்டதாரிகள் சிலரின் பாஸ்போர்ட் சம்பந்தமான பிரச்சினையை செனட்டர் நடேசன் பிரஸ்தாபித்தார்.

"இந்த ஆசிரியர்கள் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்துக் கொண்டனர். ஆனல் பிரதமர் பெல்கிரேடில் இருந்ததால், பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி இது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரவில்லை. இவ்வித அவசர விஷயங்களில் தாமதமின்றி நிர்வாகிகள் ஒரு முடிவு செய்வதற்கு நிர்ணயமான ஒரு கொள்கை வகுக்கப்படவேண்டும்" எனவும் திரு. நடேசன் கூறினர்.

இதுபற்றி ஆலோசிப்பதாகப் பிரதமர் பதிலளித்தார்.

## புதிய ஆஸ்பத்திரிகள் கிடையாது

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம் ஆஸ்பத்திரிகளுக்கான கட்டடங்களுக்கு நிதி ஒதுக்காதபடியால் அடுத்த நிதிவருடத்தில் புதிய ஆஸ்பத்திரி எதுவும் கட்டப்பட மாட்டாது.

இதுவிஷயம் சுகாதாரடைரக்டரால் சுகாதார சுப்ரீன்டன்மாருடைய வருடாந்த மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

---

## இ. போ. ச. வருமானம் அதிகரிக்கிறது

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்து சபை தனது வருமானத்தை அதிகரித்துள்ளது. சென்ற வருடம் ஜனவரி தொடக்கம் ஜூலைவரை அடைந்த லாபத்திலும் பார்க்க 63 லட்சம் ருபாயை அதிகமாக இவ்வருட ஜூலை மாதமுடிவுக்குள் இ. போ. ச. வருமானமாகப் பெற்றுள்ளது.

---

## புயல், மழைக்கு 34 பேர் பலி

லண்டன், செப். 12

போர் மோஸாவில் கடும் புயல் ஒன்று வீசியதின் காரணமாய் 27 பேர் மாண்டனர். ஆயிரக்கணக்காேனர் வீடிழந்தனர். ஜூனகாத் ஜில்லாவில் ஏற்பட்ட பெருமழையினல் 7 பேர் மாண்டனர்.

---

## 3 வீடுகள் சரிந்தன

கொழும்பு, செவ்வாய்

பொரளை 'மொடல் பாம்' வீதியிலுள்ள மூன்று வீடுகள் நேற்று மாலை இடிந்து விழுந்தன. இம் மூன்று வீடுகளிலும் வசித்து வந்த 20 பேர்களும் வீடுகள இடிந்த விழுந்த சமயத்தில் வீடுகளில் தங்கியிருக்கவில்லை.

---

## சிமிந்து இறக்குமதி

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம் சிமிந்து இறக்குமதியை [illegible] பொறுப்பேற்று செய்யும் வரை, தனிப்பட்ட இறக்குமதியாளர் வழக்கமாக இறக்குமதி செய்யும் சிமிந்தையே இறக்குமதி செய்ய அனுமதிக்கபபடுவர்.

# "சிறிய நாடாயினும் சமாதான பணியாற்ற முடியும்"

### பெல்கிரேட் மகாநாடு பற்றி பிரதமர் பேச்சு

கொழும்பு, செவ்வாய்

பெல்கிரேட் மகாநாட்டில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிட்டியதற்காகத் தாம் மகிழ்ச்சியடைவதாயும், இலங்கை சிறிய நாடாயினும் உபயோகமான வகையில் இம் மகாநாட்டில் பணியாற்ற முடிந்தது என்றும் பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இன்று செனட் சபையில் மகாநாடு பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்.

"ஒவ்வொருநாடும் தத்தம் கருத்துப்படியான பிரச்சினைகளை வெளியிட்டது.

சிறிய நாடுகளாய் இந்தாலும் மனித சமுதாயத்திற்கும், உலக சமாதானத்திற்கும் அவைகள் சேவைசெய்ய முடியும். யுத்தம் ஆரம்பிக்கப் படுமானல் மனித சமுதாயமே அழிந்து விடுமாதலால் வல்லரசுகளுக்கு பெல்கிரேட் மகாநாடு பேச்சுவார்த்தை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தது. கோடிக்கணக்கான மக்களின் இந்தக் குரல் வல்லரசுகளின் காதில் ஏறும் என்று நம்புவதில் தவறில்லை" என்றும் பிரதமர் கூறினர்.

யூகோவில் தமக்களிக்கப்பட்ட உபசாரத்திற்கான மார்ஷல்டிட்டோவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# "நாட்டில் ஜனநாயகம் மறைந்துகொண்டுவருகிறது"

### திரு. டட்லி கண்டனம்

கொழும்பு, செவ்வாய்

'பார்லிமெண்டில் பட்ஜட் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவும் இலங்கையைவிட்டு வெளியேசென்று ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்கள்" இவ்வாறு யு. என். பி தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா ஹெல்தோட்டையில் நடை பெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:

"அவர்களது சொந்த நாட்டில் மக்கள் சுதந்திரமின்றி வறுமையால், வரிச்சுமையால் வாடிக்கொண்டிருக்கும் போது உலக சமாதானத்துக்காக பேசுவதற்கு பெல்கிரேட் சென்றுர்கள். நாடு கஷ்டமான நிலையில் இருக்கிறது. ஜனநாயகம் மறைந்துகொண்டு வருகிறது. அவசரகால நிலை மக்களை அடக்கி ஆதிக்கம் செலுத்துவதற்காக 5 மாதங்களுக்குமேல் நீடிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க மக்கள் தயாராக வேண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்று கொள்கைகளைக் கொண்டுள்ளது. அதிகம் பேசப்பட்டுவரும் பண்டாரநாயக்கா கொள்கை அமுல் நடத்தப்பட்ட 3 வருடத்தில் 10 மாத அவசரகால நிலைமை உட்பட 10 ஆயிரம் மக்கள் இறந்தார்கள். திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சி 5 மாத அவசரகால நிலைமை ஆட்சியாகும். 4 மாதங்களுக்குள் தாம் பார்லிமெண்டில் இருக்கப் போவதாக பிரதமர் கூறினர். ஆனல் இன்றுவரை அவர் செனட்டில் தான் இருந்து வருகிருர்.

எஸ். எல். எப். பி. தேர்தல் வாக்குறுதி எதையும் நிறைவேற்ற வில்லை."

# "மன ஒருமைப்பாட்டினல் நாடு சுபீட்சமடையும்"

### யாழ்ப்பாண வரவேற்பில் மந்திரீ பரவசம்

யாழ்ப்பாணம், புதன்

"தேசியமயத்துக்குப் பின் இதுவே எனது முதலாவது யாழ்ப்பாண விஜயம். தொழிலாளர்களினதும் பொதுமக்களினதும் பூரண ஒத்துழைப்பின்றித் தேசியமயத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது."

இவ்வாறு தேசியசேவை தொழில் இலாகா தற்காலிக அமைச்சரான திரு. எப். டி. இஸட். சிரிவர்த்தன யாழ்ப்பாணம் இ. போ. ச. மேற்கு டிப்போவில் செவ்வாய்க்கிழமை தொழிலாளர் ஓய்வு விடுதி

(8ம் பக்கம் பார்க்க)




## உங்கள் நோய்

சுலைப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்

வைத்தியா பாபூராணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

நல்லஅனுபவமுள்ள 'சிலிண்டர்' மெஷின் வேலை தெரிந்த ஒருவர் தேவை-ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

---

நல்ல அனுபவமுள்ள கலர் அச்சுவேலைகள் செய்யக் கூடிய "பிளேட்டின்" மெஷின் வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை: ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

---

தையல், பெயின்ரிங் வேலைகளில் திறமையுள்ள மாணவிகள்தேவை. பொம்மைதொழில் பயிற்சி அளிக்கப்படும். பின்பு தொழில்வசதி வழங்கப்படும். 18-9-61 க்கு முன்மனுச் செய்க. 126, மேல் மாடி, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

### விளம்பரம்

சரசாலை- மட்டுவில் பலநோக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் 1-10-61 தொடக்கம் கடமையாற்ற ஒரு மனேச்சர் தேவை. கூட்டுறவுக் கலாசாலைப் பத்திரத்துடன் 1000 ரூபா காசுப் பிணையும், 3000 ரூபா ஆதனப் பிணையும் செலுத்தக் கூடிய 21 வயது தொடக்கம் 40 வயது வரையுள்ளோர் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். மாதம் 110 ரூபா சம்பளமும் தகுந்த வருடாந்த உயர்ச்சியும் அளிக்கப்படும். செ. கந்தையா ஆகிரியர், சரசாலை-மட்டுவில் ப.நோ. கூ. சங்கம், சர்சாலை.

---

### நன்றி

திருமதி மகாலெட்சுமியின் கணவரும் சுப்பிரமணியத்தின் மகனும் யாழ்ப்பாணம் சண்முகம் ஸ்ரோர்ஸ் சொந்தக்காரரின் மருமகனுமாகிய பரமேஸ்வரனுடைய மரணச் சடங்கில் பங்குபற்றிய நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சண்முகராஜா, சண்முகம் ஸ்ரோர்ஸ், (இரும்புச் சாமான் வியாபாரிகள்) யாழ்ப்பாணம்.

---

### விற்பனைக்கு

3ஸ்ரீ தொடர் இலக்கமுடைய "பேஜோ" (Peugeot) ஸ்கூட்டர் 1.50 c. c. விற்பனைக்குண்டு. அரசினர் கடற்படைத் தளம், காரைநகர்.

## வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

## யாழ்ப்பாண கோஷ்டி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பு பல்கலைக்கழக உதைபந்தாட்டச் சங்கத்துடன் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கம் ஒழுங்கு செய்த இரண்டு போட்டிகள் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றன.

தலைவர் திரு. அரசுவால்டன் கோஷ்டிக்கும் பல்கலைக்கழக கோஷ்டிக்கும் நடைபெற்ற முதல் போட்டியில் தலைவர் திரு. அரசுவால்டன் கோஷ்டி 2 கோல்களும், பல்கலைக்கழக கோஷ்டி ஒரு கோலும் போட்டு தலைவர் கோஷ்டி வெற்றி பெற்றது.

திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இதையடுத்து யாழ்ப்பாண மாவட்ட கோஷ்டிக்கும் பல்கலைக்கழக கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட கோஷ்டி ஒரு கோல் அடித்து வெற்றியீட்டியது.

திரு. ஈ. சபாநாயகம் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

பல்கலைக்கழக கோஷ்டிக்கும் யாழ்ப்பாண மாவட்ட கோஷ்டிக்கும் யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் வாடி வீட்டில் விருந்து அளித்தது. தலைவர் திரு. அரசுவால்டன் தலைமைவகித்த இவ்விருந்து வைபவத்தில், கேர்னல் ஏ. ஆர். உடுகம, மேயர் திரு. எஸ். டி. துரைராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தலைவர் திரு. அரசுவால்டன் வெற்றி பெற்ற யாழ்ப்பாண கோஷ்டியைப் பாராட்டிப்பேசினர்.

நன்றி தெரிவித்துப் பேசிய உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு டி. டபிள்யூ. செல்வரத்தினம் டி. ஆர். ஓ., தனது உரையில், யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்துக்குச் சொந்தமாக ஒரு மைதானம் அவசியமெனத் தெரிவித்தார்.

## ஸ்தல ஸ்தாபன கமிஷனுக்கு

### ஒழுங்கு நடவடிக்கை அதிகாரம்

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன சேவை கமிஷன் ஸ்தலஸ்தாபன சேவையில் கடமையாற்றும் ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் வழங்குவதற்கான சட்டவிதிகளை ஸ்தலஸ்தாபன விடமைச்சு தயாரித்து வருகிறது.

மேயரோ அன்றி கமிஷனரோ தீர்ப்புக் கூறுது ஒரு ஸ்தலஸ்தாபன சபையிலுள்ள ஒரு ஊழியர்மீதுஎதுவிதஒழுங்குநடவடிக்கையும் எடுக்ககமிஷனுக்கு சட்டம் அனுமதியளிக்கவில்லை என கமிஷன் சமீபத்தில் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுப்பதற்கான அவசியம் ஏற்பட்டது.

## புதிய மாதிரிச் சந்தை

### எம். எம். சி. கேள்வி

யாழ்ப்பாணம், செவ்வாய்

இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கும் மாநகரசபைக் கூட்டத்தில் திரு. எம். யேக்கப் எம். எம். சி. பின்வரும் கேள்விகளை மேயரிடம் கேட்பார்:

1. புதிய மாதிரிச் சந்தைக்கான படத்தை வரைந்தவர் யார்?

2. புதிய மாதிரிச் சந்தைக்கான இடத்தை வகுப்பதற்கான தகைமை ஏதாவதும் அந்த நிர்மாணச் சிற்பிக்கு உண்டா?

3. அடித்தளம், கட்டடம், மரவேலை ஆகியவற்றின் அளவைகள் தாம் என்ன?

4. ரூ. 4,47,000 செலவாகுமெனக் கருதப்படும் இச்சந்தை இலங்கையிலுள்ள எந்தச் சந்தையையாவது முன்மாதிரியாகக்கொண்டுள்ளதா?

5. குறிப்பிட்ட நிர்மாணச் சிற்பிக்கு வரைதல், கட்டிட அளவைகள் ஆகியவற்றில் அனுபவம் ஏதாவது உண்டா?

6. நகர அபிவிருத்தி சம்பந்தமாகப் புதிய சந்தை அமைப்பதுபற்றி நகரதிட்ட அமைப்பாளருடன் கலந்தாலோசிக்கப் பட்டதா?

7. புதிய மாதிரிச்சந்தைக்கு நாலரை லட்ச ரூபாய் அரசாங்கம் கடனைத் தருமென்பதற்கு ஏதாவது எழுத்துமூலம் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா?

நூல்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பர்மா தேக்கமரப் பலகைகள் விவகாரம் சம்பந்தமாகவும் கேள்விகள் கேட்க திரு. யேக்கப் முன்னறிவித்தல் செய்துள்ளார்.

## புத்தர் உருவம் உள்ள தங்க நாணயங்கள்

கர்நூல், செப். 12

புத்தபிரானின் உருவம் பொறிக்கப்பட்ட 171 தங்க நாணயங்கள் ஆந்திராவில் ஒரு கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## மொஸாம்பிக்கில் புரட்சி?

லண்டன், செப். 10

அங்கோலாவைப் போன்ற தேசியப் புரட்சி மொஸாம்பிக்கில் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது என்று மொஸாம்பிக் தேசிய ஜனநாயக யூனியன் தலைவர் திரு. அடிலினோ குவாம்பா இன்று இங்கு கூறினார்.

# 'மாணவர்எதிர்காலம் இருள் சூழ்ந்தது'

## உடுப்பிட்டி எம். பி. கருத்து

உடுப்பிட்டி, செவ்வாய்

படித்த மாணவர்களின் எதிர்காலம் சொகுசாய் இருக்கப் போவதில்லை. கல்லும் முள்ளும் நிறைந்த பாதையாகவே அது இருக்கிறது. இதைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்து 'தன் கையே தனக்குதவி' என்ற சிறந்த கோட்பாட்டின் அடிப்படையில் நாம் இன்றிருந்தே நமது எதிர்காலத்தை உருவாக்க முயற்சிப்பது அவசியமாகும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் திங்கட்கிழமை பிற்பகல் வதிரி திருஇருதயக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். மன்றத் தலைவர் திரு. ஜி. மரியாம்பிள்ளை தலைமைவகித்தார்.

திரு. சிவசிதம்பரம் "கடந்த பல நூற்றூண்டுகளாக சாதிக் கட்டுப்பாடென்னும் சாபக்கேட்டினல், தமிழ்ப் பகுதியில் பொருளாதார அபிவிருத்தி தடைப்பட்டிருக்கிறது. சாதி அடிப்படையிலன்றி தகுதியடிப்படையில் ஒவ்வொருவரும் தொழில் புரிந்தால் உற்பத்தி அதிகரிப்பதுடன் வாழ்க்கைத் தரமும் உயரும். இதை மாணவர் கருத்திற் கொண்டு களத்தில் இறங்க வேண்டும். இன்று உத்தியோக மோகத்தை உதறித் தள்ளிவிட்டு விவசாயம், குடிசைக் கைத்தொழில், மீன்பிடித் தொழில் ஆகியவற்றில் இளைஞர் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லையென்பதை நாம் அனைவரும் உணரவேண்டும்."

இன்றைய அரசாங்கத்தின் தவறான கொள்கைகளைப்பற்றி குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:-

மொழிவிஷயத்தில் மட்டுமன்றி பொருளாதாரத்திலும் இன்று பாரபட்சம் காட்டப்படுகிறது. சிறந்த பலனைக் குறுகிய கால எல்லையில் ஆனையிறவு உப்பளம் தரக்கூடியது என்று அமெரிக்க நிபுணர்கள் கூறியபின்னரும், அரசாங்கம் அதைப் புறக்கணித்துவிட்டு அம்பாந்தோட்டை உப்பளத்தில் நாட்டு மக்களின் பணத்தை விரயஞ்செய்வது மிகத் தவறானது.

## தொழிற் பாடசாலைகள் அதிகரிக்க வேண்டும்

திவுலபபிட்டியா, செவ்வாய்

"இப்போதுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமானல், இந்நாட்டில் அதிகமான கைத்தொழில் பாடசாலைகள் நிறுவப்படல் வேண்டும். அதுடன் தொழில் நுட்பக் கல்வியும் விருத்தியுறவேண்டும்."

இவ்வாறு, குணுமுல்ல ருஜய மகாவித்தியாலயம், குணுமுல்ல பாலிக வித்தியாலயத்தின் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் திவுலப்பிட்டிய எம். பி. திரு. எல். ஜயகொடி பேசுகையில் கூறினர்.

## தைக்காநகர் பாடசாலைக்கு

### புதிய கட்டடம்

அக்கரைப்பற்று, திங்கள்

அட்டாளைச்சேனை தைக்காநகர் கிராம முன்னேற்றச் சங்கம் கிராமக் குழந்தைகளின் கல்வி நலனை முன்னிட்டு கடந்த வருடத்தில் ஒரு பாடசாலையை ஓலையினல் கட்டி அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. பிரஸ்தாப பாடசாலைக்கு ஒரு நிரந்தரமான கட்டிடத்தை அமைப்பதற்கு கல்வி இலாகா 17 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## தேவிபுரத்தில் தண்ணீர்க் கஷ்டம்

முள்ளியவளை, திங்கள்

புதுக் குடியிருப்பைச் சேர்ந்த தேவிபுரம் குடியேற்றப் பகுதியிலுள்ள நீர் உவராக இருப்பதால் அங்குள்ள குடியேற்ற வாசிகள் குடி தண்ணீருக்காகக் கஷ்டப்படவேண்டியுள்ளது.

காணிக் கமிஷனர் இலாகாவைச் சேர்ந்த லொறி ஒன்றின் மூலமாக, சுமார் 12 மைல் தொலைவிலுள்ள முள்ளி வாய்க்கால் என்னும் இடத்திலிருந்து, தேவிபுரம் வாசிகளுக்குத் தண்ணீர் விநியோகம் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

## மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM TRADE MARK

மொனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM REGD. TRADE MARK No 18255 A.M. BUHARI

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# அமெரிக்க கரையோரத்தில் பயங்கர சூருவளி

## 4லட்சம் குடும்பங்கள் ஓட்டம்!

### மரங்கள், தந்திக்கம்பிகள், விடுகள் சேதம்

டெக்ஸாஸ், செவ்வாய்

மெக்ஸிகோ குடாவில் எழுந்த பயங்கர சூருவளி கோர்ப்பஸ், கிறிஸ்தி, டெக்ஸாஸ் ஆகிய நகரங்களைப் பெரிதும் பாதித்துள்ளது. டெக்ஸாஸ் நகரத்திலுள்ள மரங்கள், தந்திக் கம்பங்கள் காற்ருேடு காற்ருகிச் சிதைந்துள்ளன. இதுவரை கண்டிராத இச்சூருவளிக் காற்றினுல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் நகரங்களிலுள்ள வீடுகளும் பாலங்களும் வள்ளங்களும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. கல்வெஸ்டன் நகரம் ஒரு தீவாக மாறிவிட்டது. டெக்ஸாஸ் லூஸியாளுக் கரையோரமாக சுமார் 4 லட்சம் மக்கள் 200 மைல் தூரம்வரை ஓட்டம் பிடித்தனர் எனச் செஞ்சிலுவை அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவின் சரித்திரத்திலேயே இதுவரைகண்டிராக சூருவளி இது. மெக்ஸிகோ குடாவிலிருந்து மணிக்கு 100 மைல் வேகத்தில் நிலத்தை நோக்கிச் சூருவளிக் காற்று வீசுகிறதாம். டெக்ஸாஸுக்கு அப்பால் ஒரு தீவில் அமைந்துள்ள அரஸ்ஸாஸ் துறைமுகத்தை நோக்கி மணிக்கு 173 மைல் வேகத்தில் புயல் வீசுவதாகத் தெரிகிறது.

மின்சாரக் கம்பிகள் அறுந்தும் வணிகக் குழுவினர் அமிழ்ந்தும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கல்வெஸ்டன் சனத்தொகையாகிய 75,000 பேரில் 15,000 பேர் கல்வெஸ்டனை வெள்ளம் அமிழ்த்த முன்னர் கல்வெஸ்டனை விட்டு வெளியேறிவிட்டனர்.

தஞ்சமடைந்த 110,000 பேரை செஞ்சிலுவைச் சங்கத்தினர் காப்பாற்றினர். செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் 200 பேர் உதவிக்கென டெக்ஸாஸ் லூயிஸானுவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சூருவளி நிலைமைகள் பற்றி ஜனுதிபதி கென்னடி அடிக்கடி அறிந்து கொண்டேயிருக்கிருர். சூருவளி அமெரிக்காவின் இன்றைய பிரச்சினையாகும் என ஜனுதிபதி கருதுவதாகத் தெரிகிறது. டெக்ஸாஸ் நகரத்தை இந்நூற்ருண்டிலே இப்போது ஏற்பட்டுள்ள 'காவா' சூருவளி தாக்கியதுபோல வேருெரு சூருவளியும் தாக்கவில்லை என அமெரிக்க வானிலை அறிக்கை நிலையம் கூறுகிறது.

## விட்டுவிடத் தயார்!

புதுடில்லி, செப். 12

"அணு ஆயுத பரிசோதனைகளை மன வேதனையுடனேயே மீண்டும் ஆரம்பித்தோம். நிலைமை சாதகமானதும் பரிசோதனைகளை விட்டுவிடத் தயார்" என்று சோவியத் பிரதமர் குருஷ்சேவ் கூறியதாக பாரதப் பிரதமர் நேரு தெரிவித்தார்.

—

டோக்கியோ, செப். 10

இன்று மாலை 6-46 மணிக்கு டோக்கியோவிலும், சுற்றுபுறத்திலும் லேசான பூமியதிர்ச்சி ஏற்பட்டது. ஆனுல் சேதம் எதுவும் இல்லை.

## சீக்கியர் தலைவர் தாராசிங் உடல்நிலை கவலைக்கிடம்

### சாஸ்திரி-நேரு ஆலோசனை

புதுடில்லி, செப். 12

பஞ்சாபி சுபா கிளர்ச்சி காரணமாக நாட்டின் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் நடவடிக்கையாக பஞ்சாபில் இதுவரை ஆயிரத்துக்கு மேலானேர் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 436 பேர் அகாலிடால் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். மிகுதிப்பேரில் 431 பேர் கம்யூனிஸ்டுகள்.

இந்த விபரத்தை பஞ்சாப் முதன் மந்திரி திரு, பிரதாப் சிங்கைருன் நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

பஞ்சாபி சுபா கிளர்ச்சியை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டுதேசவிரோத செயல்களில் கம்யூனிஸ்டுகள் ஈடுபடுவதாக திரு. கைருேன் குற்றம்சாட்டினுர்.

### தாராசிங் நிலை கவலைக்கிடம்

தனி பஞ்சாபி ராஜ்யம்கோரி உண்ணுவிரதம் இருந்துவரும் அகாலிடால் இயக்கத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக நேற்று வெளியான ஒரு அறிக்கை தெரிவித்தது. மாஸ்டர் தாராசிங் உண்ணுவிரதம் ஆரம்பித்து நேற்றுடன் 25 தினங்கள் முடிவடைந்தன

### நேரு – சாஸ்திரி ஆலோசனை

பெல்கிரேட் மகாநாட்டுக்கும் மாஸ்கோவுக்கும் சென்று திரும்பிய பிரதமர் ஸ்ரீ நேரு நேற்று உள்விவகார மந்திரி திரு.லால் பகதூர் சாஸ்திரியுடனும், பஞ்சாப கவர்னர் திரு. என். வி. காட்கிலுடனும் பஞ்சாபி சுபா நிலைமைபற்றி ஆலோசனை நடத்தினுர். ஸ்ரீ நேரு வெளிநாடு சென்றிருந்த சமயம் பஞ்சாபி சுபா பிரச்சினைபற்றி பட்டியாலா மகாராஜா திரு. சாஸ்திரியுடன் சமரசப்பேச்சுவார்த்தை நடத்தினுர்.

## ஷோம்பேயை கைது செய்ய முடிவு

### கடாங்காவை இணைக்க காங்கோ பார்லிமெண்ட் தீர் மானம்

### ஹமர்ஷீல்ட் காங்கோ செல்கிருர்

லியப்போல்ட்வில்லி, செப். 12

கடாங்கா அதிபர் ஷோம்பேயைக் கைதுசெய்து கடாங்கா பார்லிமெண்டையும் கலைத்து கடாங்கா படைகளையும் கடாங்கா நிர்வாகத்தையும் காங்கோ மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்று லியப்போல்ட்வில்லியில் சென்ற வெள்ளிக்கிழமை அந்தரங்கமாக நடைபெற்ற காங்கோ பார்லிமெண்ட் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

காங்கோ பார்லிமெண்ட் நிறைவேற்றிய இத்தீர்மானத்தை அமுலுக்கு கொணடுவருவதுபற்றி காங்கோ மத்திய அரசாங்க பிரதமர் திரு. அடௌலா நேற்று தமது மந்திரிசபையைக் கூட்டி ஆராய்ந்தார். இக்கூட்டத்தில் உதவிப் பிரதமர் திரு. கிஸங்காவும் காங்கோ இராணுவத் தளபதி ஜேணல் மோபுத்துவும் கலந்து கொண்டனர்.

கடாங்காமீது காங்கோ அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை ஐ. நா. எதிர்க்காது என்று காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி ஏற்கனவே அறிவித்துள்ளார்.

### ஹமர்ஷீல்ட் வருகிருர்

காங்கோவுக்கு ஐ.நா. தொடர்ந்து உதவியளிப்பது சம்பந்தமாக நிலைமையை நேரில் ஆராய்வதற்காக ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக்ஹமர்ஷீல்ட் இன்று லியப்போல்ட்வில்லிக்குவந்துசேருவார். காங்கோ பிரதமர் திரு. அடௌலாவும் உதவிப்பிரதமர் திரு. கிஸங்காவும் விடுத்த அழைப்பின் மீது திரு. ஹமர்ஷீல்ட் லியப்போல்ட்வில்லி வந்து சேருகிருர்.

இதற்கிடையில் கடாங்கா அதிபர் திரு.ஷோம்பே நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் தாம் லியப்போல்ட்வில்லிக்குச் செல்லாவிட்டால் மோசமான விளைவுகள் ஏற்படுமென ஐ. நா. அதிகாரிகள் எச்சரிக்கை செய்ததாகத் தெரிவித்தார்,

திரு. ஷோம்பேயின் இக்கூற்றை லியப்போல்ட்வில்லியிலுள்ள ஐ. நா. பிரதிநிதி மறுத்தார் "லியப்போல்ட்வில்லிக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது" என்றே தாம் யோசனை கூறியதாக ஐ. நா. பிரதிநிதி தெரிவித்தார்.

## இந்திய துருப்புகள் சுட்டனராம்

கராச்சி, செப் 12

மேற்குப் பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் சிப்பாய்களை நோக்கி இந்தியத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பாகிஸ்தான் துருப்பினருக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லையென்றும் இத்துடன் ஐந்தாவது தடவையாக இந்தியச் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனரென்றும் பாகிஸ்தான் ரேடியோ இன்று தெரிவித்தது.

—

## பந்தயத்தில் கோர விபத்து

மான்பொ (இத்தாலி) செப் 10

இத்தாலியப் போட்டிப் பந்தயத்தில் பிரிட்டனைச் சேர்ந்த ஆஷ்மோர் எனபவரால் செலுத்தப்பட்ட கார் ஒன்று பாதையை விட்டு விலகிச் சென்றதன் விளைவாக அநேக பார்வையாளர்கள் கொல்லப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது

இன்று இங்கு நடந்த இச்சம்பவத்தில் ஜெர்மனிய ரேஸ் நட்சத்திரம் வான்டிரிப்ஸும் அவரது பந்தயக் காரில் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது.

## ஏழாலை கொலைவழக்கில் 3 எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

ஏழாலை கொலைவழக்கு விசாரணையின்போது சாட்சியம் திருப்தியில்லாததால் விசாரணையைத் தொடர்ந்துநடத்த விரும்பவில்லையென ஜூரிமார் அபிப்பிராயம் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. எதிரிகள் மூவரையும் விடுதலை செய்தார்.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் திகதி ஏழாலையில் சின்னத்தம்பி சரவணமுத்து என்பவரைக் கொலை செய்ததாக கந்தன் தில்லையம்பலம் முத்தன் அப்பாத்துரை, சின்னத்தம்பி செல்வராஜா ஆகியோர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வட மாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிராசிக்கூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானுர். திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் திரு. சாகிதுவுடன் எதிரிதரப்பில் ஆஜரானுர்.

சுருட்டுத் தொழிலாளியான ஏழாலையைச்சேர்ந்த 15 வயதான எஸ். கந்தசாமி என்பவர் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் தனது தந்தையென்று கூறினுர். தமது சாட்சியத்தில் கந்தசாமி மேலும் பின்வருமாறு கூறினுர்:

சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 5 அல்லது 6 மணியளவில் நான் தம்பிராசா கடைக்கு தேயிலையும் சீனியும் வாங்குவதற்குச் சென்றேன். தந்தையார் வீட்டுக்கு வந்துகொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவரைப்பின் தொடர்ந்து மூன்று எதிரிகளும் வந்து கொண்டிருந்தனர். "அடே நில்லடா" என்று முதல் எதிரி கூறினுர். 2-ம், 3-ம் எதிரிகள் வந்து தந்தையைப் பிடித்துக் கொண்டனர். முதல் எதிரி கையில் வைத்திருந்த ஒரு கத்தியால் குத்தினு. நெஞ்சில் குத்துவிழுந்தது. நான் "ஐயோ அப்புவை ஏன் குத்துகிறீர்கள்" என்று கத்தினேன். "நீயும் இங்கே வந்தால் உன்னையும குத்துவேன்" என்று முதல் எதிரி கூறினுர். தந்தையின் நெஞ்சிலிருந்து உருவி எடுத்த கத்தியுடன் என்னைத்துரத்தினுர். நான் ஓடினேன். பின்னர் என்ன நடந்ததென்றுஎனக்குத் தெரியாது.

திரு. கணேசலிங்கம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழக்கறிஞர்: நீர் சாட்சிக் கூண்டுக்குள் வருவதற்கு முன்னர் உமக்குச் சொலவிக் கொடுத்ததைத்தான் இங்கு சொல்கிறீர் என்று நான் கூறுகிறேன்.

சாட்சி: இல்லை. எனக்கு எவரும் சொல்லிக்கொடுக்கவில்லை.

வழக்கறிஞர்: கீழ்க்கோர்ட்டில் உமது நலனை வழக்கறிஞர் எவரும கவனித்தாரா?

சாட்சி: ஆம். கீழ்க்கோர்ட்டில் ஒரு அததுவக்காத்தையும் புரக்டரையும் ஏற்படுத்தியிருந்தோம்.

வழக்கறிஞர்: உமது புரக்டர் யார்?

சாட்சி: திரு. ஏ. சொக்கலிங்கம்.

வழக்கறிஞர்: அவர் இங்கு நீதிமன்றத்தில் இருக்கிருரா?

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: இங்கு உமது நலனைக்கவனிப்பதற்காக அவரை ஏற்படுத்தியிருக்கிறீரா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: பிராசிக்கூஷன் தரப்பில் கவனிப்பதற்கு முடிக்குரிய வழ்க்கறிஞர் தகுதியுடையவரல்லவா?

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: மேல்கோர்ட்டில் உமது நலனைக்கவனிப்பதற்கு நீர் ஒரு புரக்டரை எப்பொழுது ஏற்படுத்தினீர்?

சாட்சி: இந்த நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கும் திகதி எங்களுக்கு அறிவிக்கப்பட்டதும்.

நீதியரசர்: நீர் விசேஷ பணம் யாருக்குக் கொடுத்தீர்.

சாட்சி: திரு. சொக்கலிங்கத்துக்கு.

நீதியரசர்; அவர் இங்கு வந்திருக்கிருரா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: திரு. சொக்கலிங்கம் இங்கு இருப்பதை நான் கவனித்தேன். இவ்விஷயத்தை வழக்கறிஞர் சபையும் வளக்கறிஞர் சங்கமும் ஆராய வேண்டும்.

மற்ருெரு கேள்விக்கு சாட்சி பதிலளிக்கையில் தாங்கள் ஒரு புரக்டரை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகத் தோன்றியதென்ருர்.

நீதியரசர்: நீர் யாரை ஏற்படுத்தியிருந்தாலும் அவர் முடிக்குரிய வழக்கறிஞருடன் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள முடியாது. முடிக்குரிய வழக்கறிஞரும் உமது வழக்கறிஞருடன் விவாதிக்க முடியாது.

இச்சமயத்தில் சாட்சியம் திருப்தியாக இல்லையென்றும் விசாரணையைத் தொடர்ந்து நடத்தவிரும்பவில்லையென்றும் ஜூரிமார் தெரிவித்தனர்.

நீதியரசர் எதிரிகள் மூவரையும் விடுதலை செய்தார்.

—

## சிங்கள ஜூரிமார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் சுப்ரீம் கோர்ட் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஒரு வழக்குவிசாரணையில் சிங்கள ஜூரிமார் நியமிக்கப்பட்ட சம்பவம் இப்பொழுது தான் நிகழ்ந்துள்ளது.

1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ந் திகதி தலைமன்னுரைச் சேர்ந்த எச். ஏ. பியதாசா என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக வர்ணகுலசூரியா செபஸ்தியன் பெர்னுன்டோ என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட இவ் வழக்கு வட மாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் சென்ற திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் வழக்கு விசாரணையை நடத்தினுர். திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், என். ஆர். விஜயநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் எதிரிதரப்பில் ஆஜரானுர்.

ஜூரிமாருக்காகவும் எதிரிக்காகவும் முஸ்லிம் சாட்சியொருவரின் சாட்சியத்தை சிங்களத்திலும் வழக்கறிஞர்கள், சுருக்கெழுத்தாளரின் வசதிக்காக ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது.

—

## கானுவில் மொரார்ஜி

அக்ரா, செப். 12

கானு தலைநகரான அக்ராவில் இன்று ஆரம்பமாகும் காமன்வெல்த் நிதி மந்திரிகளின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய நிதி மந்திரி திரு.மொரார்ஜி தேசாய் நேற்று இங்கு விமானத்தில் வந்து சேர்ந்தார். திரு. தேசாயை கானு நிதி மந்திரி விமான நிலையத்தில் வரவேற்ருர்.

மகாநாட்டில், குறிப்பாக எந்த விஷயத்தையும் பிரஸ்தாபிக்கும் நோக்கம் தமக்கு இல்லையென்று திரு. தேசாய் நிருபர்களிடம் தெரிவித்தார்.

**மணி வாக்கு**

'பேருண்மைகள் எளியன. ஆதேபோல் பெரியோரும் எளியர்'.

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆவணி மீ 28உ (13-9-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.

## தலை மன்னர் காவல் முகாம்

தலைமன்னர் தடுப்புக் காவல் முகாம் சிறையிலுள்ள நிலைமை பற்றி நமது மன்னர் நிருபர் தெரிவித்துள்ள விபரங்கள் கவலை அளிப்பவையாகும். நூறுபேர்களை வைக்கக்கூடிய வசதிகளே உள்ள இந்த முகாமில் சுமார் 400 பேர்வைக்கப்பட்டுள்ளனராம். சுகாதார ஏற்பாடுகள் சரிவர இல்லையென்றும் அதனல் 50 பேர் நோய்வாய்ப்பட்டு இருவர் வயிற்று நோயால் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விவரங்கள் உண்மையாயின், இது குறித்து இலங்கை அரசாங்கம் உடன் கவனித்து நிலைமையைச் சீர் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த முகாமில் 200 பேர் ஆறு மாதங்களுக்கு அதிகமாக வைக்கப்பட்டுள்ளனராம். 20 பேர் ஒரு வருடத்துக்கு மேலாக அடைபட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்திய அரசாங்கம் இவர்களை இந்தியப் பிரஜைகளென்று ஒப்புக்கொள்ள மறுப்பதாலேயே, அவர்கள் இவ்வளவு காலமாக அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் எவ்வளவு காலத்துக்கு அவர்கள் அங்கு கிடக்க வேண்டும்? சட்டம் இவ்விஷயமாக என்ன கூறுகிறது? சட்டவிரோதமாகக்குடியேறியவர்களை, காலவரையறையின்றிக் காவலில் வைக்க சட்டம் இடம் தருகிறதா?,

இதைபபற்றி விசாரித்ததில், இவர்களைக் கப்பலில் ஏற்றி அனுப்பும் வரை காவலில் வைத்திருக்கச் சட்டம் இடமளிப்பதாகத் தெரிய வருகிறது. இந்தியாவுக்குக் கப்பல் ஞாயிறு தவிர தினசரி செல்லுகின்றது. மற்ற நாடுகளுக்கும் அடிக்கடி செல்லுகின்றன. அப்படியிருந்தும் அவர்களை இப்படி காலவரையறையின்றி அடைத்து வைப்பது சரியா? இந்தியா அல்லது வேறு நாடுகள் அவர்களை ஒப்புக்கொள்ளாவிடில், அம் மக்கள் அங்கேயிருந்து சிறுகச் சிறுக மடிய வேண்டியதுதானா? "ஹேபஸ்கார் பாஸ்" என்ற மனித உரிமைச் சட்டமும் இவர்களுக்கு உதவாதா? இது பற்றி சுப்ரீம் கோர்ட்டில் மனுச் செய்து சட்டரீதியாகக் கஷ்ட நிவாரணம் தேடவேண்டும்.

எப்படியும் 10[illegible] பேருக்கென்று ஏற்படுத்திய இடத்தில் நான்குமடங்கானவர்களைமாதக் கணக்கில் அடைத்து வைப்பது எவ்வளவு இம்சையென்பதை அரசாங்கமும் உணர வேண்டும். சட்டவிரோதமாக வந்திருப்பின் அது குற்றமே. என்றாலும் அவர்களும் மனிதர்கள். மனிதாபிமானத்துடனேயே அவர்களையும் நடத்த வேண்டு அதிகமானவர்கள் பிடிபட்டால் அவர்களை வைத்திருக்க காவல் முகாமை தக்கபடி விஸ்தரிக்க வேண்டும். இன்றேல் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குமேல் அவர்களை ஜாமினிலாவது விடுதலை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களுக்காகும் செலவு மிச்சமாவதுடன், இந்த அவப் பெயரும் பொறுப்பும் அரசாங்கத்துக்கு இல்லாது போகும்.

மனிதர்களைப் பற்றிய இவ் விஷயத்தில் இலங்கை, இந்தியா இவ்விரு அரசாங்கங்களுக்கும் பொறுப்பு உண்டு. இரு அரசாங்கப் பிரதிநிதிகளும் இவ் விஷயத்தில் கலந்து பேசி, மனிதாபிமான முறையில் இதைத் தீர்க்க முன் வர வேண்டும். மனமுண்டானல் நிச்சயம் மார்க்கமுண்டு. இந்தப் பிரச்சினையைத் தக்கபடி தீர்க்காமல், நிலைமையை இப்படியே நீடிக்க விட்டுவிடுவதாயின், அது மனிதருக்குச் செய்யும் பெரும் பாவமாகும்.

# இன்று விநாயக சதுர்த்தி

— க. வை. சர்மா —

உண்டென்பவர்க்கெல்லாம் ஒளி விளக்காய் நின்று அருள்புரியும் தனி முதற் பரம்பொருள் விநாயகப்பெருமான். இல்லையென்பார்க்கும் இலைமறை காய்போல நின்று அவரவர் பண்புக்கு ஏற்ப அறிவுறுத்துவார்.

"எக்கருமஞ் செய்தாலும்
ஏதவத்தைப் பட்டாலும்
அக்கருமம் ஆங்கவரை
உள்ளுவதால்—மிக்கவருள்
சேரச் சிறப்பிக்கும்
சீரார் முதற்பிள்ளை
யாரைத் துதிப்போம்
அறிந்து." என்றவாறு

சைவசமயிகளாகிய நாம் எந்தக் கருமத்தை எந்த நிலையில் எப்போது செய்யத் தொடங்கினலும் அந்தக் கருமம் இனிது நிறைவேறும் பொருட்டு முதலில் விநாயக வணக்கம் செய்தே தொடங்குகிறோம். தம்மைவிடத் தமக்குமேல் வேறொரு தலைவரின்றித் தாமே தனிநாயகராக விளங்குபவர் விநாயகப் பெருமான் ஆவர். அப்பெருமானை அநுதினமும் வழிபட்டு வருவோமாயினும், ஆண்டுக்கொருமுறை அவரைக் குறித்து விசேட வழிபாடாற்றும் புண்ணியதினம் ஆவணிமாச அமாவாசை கழித்து வரும் நான்காம் நாளாகிய சதுர்த்தி. அதனைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

### ஓங்காரம்

முழுமுதற் கடவுளாகிய இறைவன் சிவ அம்சமும் திருவருட் சக்தி அம்சமும் ஒருங்கமை[illegible] சகல ஜீவராசிகளும் இலகுவில் வழிபாடாற்றி உய்தி பெறும்பொருட்டு ஒரு தனி திருக்கோலம் கொண்டருளினர். அத் திருவடிவத்துக்கு முகமாக அமைந்த[illegible] [illegible]ல்லா மந்திரங்களுக்[illegible] மூலமாகி வேதத்தின் [illegible] உச்சரிக்கப்படும் பிரணவம் என்னும் ஓங்காரமயமாகும். பிந்துவும் நாதமும் சேர்ந்ததே ஓங்காரம். யானைமுகம் ஓங்காரவடிவா[illegible] அம் முகத்திலுள்ள [illegible] நீண்டு அமைந்ததே து[illegible]கை (தும்பிக்கை) என [illegible]துவது. யானைமுக இயல்[illegible] ஏற்ப உச்சியில் கும்பம் போன்ற இரு மத்தகங்கள், [illegible] இடக் கண்களோடு நெற்றிக் கண்ணும் சேர மூன்று கண்கள், நாலவாய் (தொங்குகின்ற வாய்—வக்கிரதுண்டம்), இரு தந்தங்கள், குறுகிய கழுத்து, முறம்போன்ற இரு செவிகள், அமையும். குறுத்த வடிவம், செம்பவளத் திருமேனி, பெருத்த வயிறு, நான்கு கைகள் — ஒன்றில் பாசம் (கயிறு), மறு கரத்தில் அங்குசம் (தோட்டி), வலக் கரத்தில் தமது முகத்திலுள்ள இரு தந்தங்களில் முரித்த ஒன்று, இடத் திருக்கரத்தில் மோதகம், குறுகியனவாகி அன்றலர்ந்த செந்தாமரைப் பூப்போலும் இரு திருவடிகள், இவையே அத் திருவுருவின் தோற்றம்.

விநாயகத் திருவுருவில் சிவ அம்சம் கூடவும், முருகன் திருவுருவில் சக்தி அம்சம் கூடவும் அமைந்தன. விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் என நால்வர் சிவபிரான் திருக்குமாரர்கள் என்பது உபசாரமேயாம். அவர்களைப் பற்றித் தெளிவுறச் சொல்வதானல் இறைவன் ஒவ்வொரு தருணத்தில் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்ட திருத்தோற்றங்கள் என்பதே உண்மையாகும்.

விநாயகப் பெருமானுக்குரிய திருப்பெயர்கள் பல. சிவ கணங்களுக்கும், பூதகணங்களுக்கும், தலைமை தாங்குவதால் கணபதி எனப்படுவர். தம்மை மெய்யன்போடு நினைப் போருக்கு வரும் இடையூறுகளைப் போக்குவதற்கும், நினையாதவர்க்கு இடர்களை ஆக்குவதற்கும் காரணராவதால் விக்கினேசுவரர் எனப்படுவர். இறைவன் கொண்ட முதல் திருத்தோற்றமாதலின் அக்கிரஜன் எனவும், முதல் தெய்வமாக மதிக்கப்படுதலின் அக்கிரகண்ணியன் எனவும், சுயம்பிரகாசமாய் சிவபிரானின் வேருகாது மதிக்கப்படுதலின் ஏரம்பன் எனவும், தம்மின் வேருகாத சித்தி, புத்தி, வல்லபா என்னும் சக்திகளை என்றும் தம்மோடு கொண்டிருப்பதனுலும் வேருகத் திருமணம் செய்யாமையினலும் பிரமசாரி எனவும் போற்றப்படுவர்.

### சிறந்த விரததினங்கள்

இப்பெருமானுக்குரிய சிறந்த விரததினங்களாக ஆவணிச் சதுர்த்தியும், மார்கழி மாசத்து வரும் முற்பக்க ஆறும் நாளாகிய விநாயக சட்டியும் மதிக்கப்படும். பன்னிரண்டு மாசங்களிலும் வரும் பூர்வபக்க சதுர்த்திகளை விரத தினங்களாக அநுட்டிப்பவரும் உண்டு. சைவசமயிகள் யாவரும் அநுட்டிக்க வேண்டிய விரதம் ஆவணிச் சதுர்த்தி. விரதம் அநுட்டிப்பது என்ருல் அது நமது சக்திக்கு அப்பாற்பட்டது என்று எவரும் எண்ணிவிடலாகாது. எவராயினும் அகமும் புறமும் தூயராய் விநாயக வழிபாடு செய்வதுதான் தலையாய கடமையாகும்.

ஒவ்வொருவரும் தமது சக்திக்கு ஏற்ற முறையில் வழிபாட்டை அமைத்துக் கொள்ளலாகும். உடனுக்குடன் தேடிக் கொள்வதாயின் விநாயகத் திருவடிவத்தை களிமண், சருக்கரை, சந்தனம், மஞ்சள், குங்குமம், பசுச்சாணம் என்பவற்றுள் ஏதாவதொன்றைக் கொண்டு செய்து கொள்ள வேண்டும். செம்பினலேனும் சிலையினலேனும் விக்கிரகத்தை ஆக்கிவைத்து அநுதினமும் வழிபடுபவர் சதுர்த்தியிலும் அதற்கே விசேட வழிபாடு செய்யலாம் தாமே பூசித்து வழிபாடு செய்யும் வாய்ப்பு இல்லாதவர் அயலிலுள்ள விநாயகர் ஆலயங்களுக்குச் சென்று வழிபடலாம். அபிஷேகம் அருச்சனை செய்தவிடத்தும் விநாயகப் பெருமானது திருக்கோலத்தைத் தரிசித்து மனமுருகித் தோத்திரஞ் சொல்லித் துதிக்காவிடின் வழிபாடு பூரணமாகாது.

### வழிபாட்டின் அவசியம்

சிலர் வழிபாடு செய்யத் தொடங்கி டாம்பீகமாகச் செலவு செய்யுமளவில் திருப்தி அடைகின்றனர். வழிபாட்டின் பொருட்டு நாம் செய்யும் புறச் செயல்கள் யாவும் எமது மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனிடத்தில் ஒப்பிப்பதற்கு உதவியானவை. அவை மாத்திரம் வழிபாடாவதில்லை. எல்லாமாய் எங்குமாய் நிறைந்து, தமக்கென விருப்பு வெறுப்பு அற்று விளங்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நாம் தேடி ஒப்பிக்கும் அற்ப பொருள் மாத்திரம் உவப்புடையதாகாது. இவற்றைத் தேடுவதிலும் செலவு செய்வதிலும் கொள்ளும் முயற்சியில் மிகச் சிறுபாகமாய் ஒருஐந்து நிமிட நேரமாவது விநாயகப் பெருமான் திருவுருவை எமது தூய உள்ளத்தே உறத்தியானித்து, கணபதி மூலமந்திர ஜெபம் செய்து வணங்க வல்லேமாயின் அது சாலச் சிறந்த பயனைத்தரும்.

விநாயகப் பெருமானை வழிபட்டு உய்தியடைந்தவர் பலர். வரலாறு விரிக்கிற் பெருகும். ஒன்றைச் சுருக்கி விளக்குவாம். திருக்கைலாசபதியின் திருமுன்பு விகடக் கூடித்தாய விநாயகப்பெருமானது தோற்றத்தைக் கண்டு நகைத்த சந்திரன் அவரது சாபத்துக்கு ஆளாகி ஒளிஇழந்தான். பின்பு அப்பெருமானது பரத்துவத்தை இந்திரன் உரைக்க உணர்ந்த மதியோன் அவரைக் குறித்து இருபத்திரண்டு வருடம் தவம் செய்து வழிபாடாற்றி உய்தி பெற்ற தினம் ஆவணிச் சதுர்த்தியாகும். அதனலேயே சதுர்த்தி தினத்தில் (நாலாம்) பிறை பார்த்தல் தகாது எனத் தவிர்க்கப்பட்டிருக்கிறது. எவராயினும் ஆவணிச் சதுர்த்தியில் விநாயகப் பெருமானை முறைப்படி வழிபாடு செய்வரேல் அப்பெருமானது திருவருளுக்கு ஆளாவர்.

# திருக்கேதீச்சரம்

## சிவானந்த குருகுலம்

கௌரிஅம்மாள் சமேதகேதீச்சர நாதனின் திருவருளைத் துணைகொண்டு, திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை, இந்து பெடரேஷன் இவற்றின் ஆதரவிலே, ஆலய குருக்கள்மார்களுக்கான ஏழு வருட குருகுல வாச பயிற்சி அளிக்க ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளது. ரூ. 30 ஆயிரத்துக்குமேல் செலவில் கட்டடமும் தளவாடங்களும் கூடிய இக்குருகுலத்தின் ஆரம்பவிழா பிலவ வருடம் ஐப்பசி மாதம் 24ந் திகதி (9-11-1961) பகல் 12-30 க்கு நடைபெறுகிறது.

சாப்பாடு, இடவசதி, உடைகள், புத்தகங்கள், படிப்பு எல்லாம் மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பெறும்.

பூசகர் வகுப்பிலே 25 மாணவர்களுக்கு இடமுண்டு. ஆனல் ஆரம்பத்தில் 10 முதல் 15 மாணவர்கள், சோதனையின் மீது தகுதி கண்டு சேர்த்துக் கொள்ளப்பெறுவர். குறைந்த வயது 14.

### குருகுல நிர்வாகிகள்

பிரின்ஸிபால்-பிரம்மஸ்ரீ அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள்.

உதவி பிரின்ஸிபாலும் சமஸ்கிருத பயிற்சி டைரக்டரும்- பிரம்மஸ்ரீ கிருஷ்ண கனபாடிகள், பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள்.

தமிழ் பயிற்சி டைரக்டர்- ஸ்ரீ கொக்குவில் குமாரசுவாமிப் புலவர்.

### ஆலோசனை சபை

1. பிரின்ஸிபால் (தலைவர்)
2. பிரம்மஸ்ரீ மாவிட்டபுரம் சு. துரைச்சாமிக் குருக்கள்.
3. பிரம்மஸ்ரீ காரைநகர் ச. கணபதீச்வரக்குருக்கள்.
4. பிரம்மஸ்ரீ திருகோணமலை பூர்ணனந்தக் குருக்கள்.
5. பிரம்மஸ்ரீ நைனதீவு கைலாசநாதக் குருக்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இன்று பிள்ளையார்சதுர்த்தி. உலகில் இந்துக்கள் உள்ள இடங்களிலெல்லாம் இது கொண்டாடப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன் தமிழ் நாட்டில் பிள்ளையார் விக்கிரகங்களை உடைக்கும் இயக்கமொன்று நடந்தது. அந்த இயக்கத்தின் பயனக பிள்ளையார் தத்துவத்தை பலரும் அறிந்ததுடன் பல பிள்ளையார் கோயில்களுக்கும் புதுப் பொலிவு பிறந்ததைக் கண்டோம்.

சென்னை இந்துப் பத்திரிகையில், ஆப்கானிஸ்தானத்திலே பிள்ளையார் விக்கிரகங்கள் காபூலுக்குப் பக்கத்தில் கண்டெடுக்கப்பட்டனவென்றும், ஆப்கானிஸ்தானிலுள்ள இந்துக்கள் இப்போதும் விநாயக வழிபாடு செய்வதாயும் ஒரு காலத்தில் அப்பகுதியிலும் இந்து சமயம் பரவியிருந்ததாயும் டாக்டர் டி. என். ராமச்சந்திரன் ஒரு ஆராய்சிக் கட்டுரை எழுதியிருக்கின்றார்.

⁂ ⁂ ⁂

போன வருஷம் ஆடிவேல் விழாவுக்குத் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த ரமணி அம்மாள் செய்த பிள்ளையார் பஜனை இன்றும் பலரது காதுகளில் ஒலித்துவருகின்றது.

"பிள்ளையார், பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார், ஆற்றங்கரை மீதிலே அரசமரத் தடியிலே, வீற்றிருக்கும் பிள்ளையார், வினைகள் தீர்க்கும் பிள்ளையார்" என்று புதுவிதமான பஜனை செய்தார்.

சமீபத்தில் திருச்சிக்குச் சென்றிருக்கையில், அங்குள்ள புகழ்பெற்ற மலைக்கோட்டை மீதேறி உச்சியிலுள்ள பிள்ளையாரைத் தரிசித்தேன். மலை உச்சியிலிருந்து ஊரிலும் உலகிலும் நடப்பதைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

இவ்வளவு பெரிய பிள்ளையார், இவ்வளவு சிறிய மூஞ்சூர் மீது ஏறினல், அது நசுங்கிவிடாதா? என்று என்னுடன் வந்த ஒரு வாலிப அன்பர் கேட்டார். சரியான சந்தேகம் தானே. பிள்ளையார் வான வெளியிலே சஞ்சரிப்பவர். அங்கு யாருக்குமே கனம் கிடையாதென்று ககாரினும் தெரிவிக்கின்றார்.

ஆகவே, பிள்ளையாருக்குக் கனமே இராதென்றும் கனமில்லாத பிள்ளையாரை மூஞ்சூர் தூக்கிச் செல்லுவது சிரமமல்லவென்றும் கூறியதும், அந்த அன்பர் சிரித்துவிட்டு, மேலே எதுவும் கேட்கவில்லை.

⁂ ⁂ ⁂

மன்னரிலிருந்து ஓர் அன்பர் வந்தார். அங்குள்ள காவல் முகாமைப்பற்றி விசாரித்தேன். "பெல்ஸன் காம்பா?" என்றார். ஹிட்லர் யூதர்களை ஒழிக்க வைத்திருந்ததே 'பெல்ஸன் காம்ப்'. தலைமன்னர் முகாமுக்கு. அங்கு பொதுவாக இந்தப் பெயர்தான் வழங்குகிறதாம்.

அங்கு சில தாய்மார்கள் கைக்குழந்தைகளுடனே படுக்கப் பாயுமின்றி கட்டாந்தரையில் படுப்பதாயும், வேறு பல் கதைகளையும் கூறினர்.

ஏழையின் கணணீர் கூரிய வாளை யொக்கும் என்பர். அங்கு அபலைகள் சிந்தும் கண்ணீர் இலங்கைக்கும், இங்குள்ள சிறிமாவின் ஆட்சிக்கும் நல்லதல்ல. புத்தபெருமான் கூறிய 'மைத்திரி' எனும்அன்பு உபதேசப்படி, பிரதமர் சிறிமா நேரில் தலைமன்னர் முகாமுக்குச் சென்று பார்த்து அங்குள்ளவர்களை நேரில் கண்டு பேசி அவர்களது இன்னல் களைக்கேட்டு, அவற்றைக் கூடுமானவரை தீர்ப்பது, அவரது ஆட்சிக்கே நல்லதாகும்.

* * *

மேன்மைப்படுவாய் மனமே
கேள்,
விண்ணின் இடிமுன்
விழுந்தாலும்

(5ம் பக்கம் பார்க்க)

இலட்சுமிதோட்டவிசாரணை

# 'இ.தொ.கா.வினர்நிர்ப்பந்தம்' பற்றி புகார் செய்யவில்லை,

## எஸ். எல். எப் பி. யூனியன் ஸ்தாபகர் சாட்சியம்

**கொழும்பு, செவ்வாய்**

**1958ம் ஆண்டு ஆரம்பித்து 1959ம் ஆண்டு வரை இருந்த எஸ். எல். எப். பி. யூனியனின் ஸ்தாபகர் திரு. ஜெயவர்த்தனு என்பவர் நேற்று இலட்சுமித் தோட்ட விசாரணையில் சாட்சியமளிக்கையில் தமது யூனியன் அங்கத்தவர்களை இ. தொ. கா. அங்கத்தவர்கள் தங்களுடன் சேரும்படி நிர்ப்பந்தப்படுத்திய தாகக் கூறினர். திரு. ஜி. ஜி. யின் கேள்வி யொன்றுக்கு அவர் பதிலளிக்கையில் இந்த நிர்ப்பந்தம் பற்றி எந்த அதிகாரிக்கும் தாம் எழுத்து மூலம் புகார் செய்யவில்லையென்று கூறினர்.**

கொழும்பு, செவ்வாய்

இலட்சுமித் தோட்ட விசாரணை நேற்றுக் காலை மீண்டும் கமிஷனர் திரு. கொன்ராட் பெரேரா ஞன்னிலையில் ஆரம்பமான போது திரு. எஸ். ஜயவர்த்தனு என்பவர் சாட்சியமளித்தார். இவரை முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சாம் விஜயசிங்கா விசாரணை செய்தார். திரு. ஜயவர்த்தனு தமது சாட்சியத்தில் பின்வருமாறு கூறினர்:

நான் ஒரு புகைப்படப்பிடிப்பாளர். 1958-ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் எஸ். எல். எப். பி. யூனியனை ஆரம்பித்தேன். 1959-ம் ஆண்டுவரை அந்த யூனியன் இருந்தது. இந்த யூனியனின் பதிவு ரத்துச் செய்யப்பட்டது. ஆனல் எப்பொழுது ரத்துச் செய்யப்பட்டதென்பதைச் சொல்ல முடியவில்லை. இந்த யூனியனில் 200 அங்கத்தவர்களிருந்தனர். இதற்கு நாவலப்பிட்டியில் ஒரு காரியாலயமும் இருந்தது. யூனியன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் 25 சதம் சந்தாப்பணமாகச் செலுத்திவந்தனர்.

*சாம்: யூனியன் பதிவு ரத்துச் செய்யப்பட்டதும் அதன் நிதி என்னவாயிற்று?*

*சாட்சி: அதுகண்டிக் காரியாலயத்துக்கு மாற்றப்பட்டது. அந்தக் காரியாலயத்துக்கு வீரக்கூன் என்பவர் பொறுப்பாக இருந்தார்.*

சாட்சி மேலும் கூறியதாவது:

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் சிங்களத் தொழிலாளர்களும் தமிழ்த் தொழிலாளர்களும் அங்கம் வகிக்கின்றனர். எஸ். எல். எப். பி. யூனியன் அங்கத்தவர்களை தங்கள் சங்கத்தில் சேரும்படி இ. தொ. கா. அங்கத்தவர்கள் நிர்ப்பந்தித்தனர்.

தொழிலாளர்களுக்கிடையில் வெவ்வேறு யூனியன் இருந்தால் அங்கு தொழிலாளர்களுக்கிடையில் குழப்பங்கள் ஏற்படும்.

"இந்த நாட்டின் பிரஜைகளுக்கு இ. தொ. கா. ஆதரவு கொடுப்பதில்லை. முதலாளிமார் மீது இ. தொ. கா. கொண்டு வந்த நிர்ப்பந்தம் காரணமாக சிங்களத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்". என்று கூறிய சாட்சி ஜெயவர்த்தனு இதற்கு உதாரணமாகப் பின்வருமாறு கூறினர்:

கிறீன்வூட் தோட்டத்தில் நிர்வாகத்தின்மீது இ. தொ. கா. கொண்டுவந்த நெருக்கடி காரணமாக நிர்வாகம் விதேசியத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியது. தொடங்காஸ்லந்தையிலும் இதே சம்பவம் நிகழ்ந்தது. இலட்சுமித் தோட்டத்திலும்கூட கலபொட டிவிஷனில் தடிகள் சகிதம் இ. தொ. கா. அங்கத்தினர் குழப்பம் விளைவிக்க எத்தனித்தனர். இதை ஹெண்டிசிங்கோ என்பவர் யூனியன் காரியாலயத்தில் என்னிடம் சொன்னர். பின்னர் இது விஷயத்தை நாவலப்பிட்டி பொலிசுக்குப் புகார் செய்தேன். நாவலப்பிட்டி பொலிசார் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர். அடிக்கடி இவ் விஷயம்பற்றி கம்பளை பொலிசுக்குப் புகார் செய்து வந்தேன். பின்னர் எனது புகார் பற்றிக் கம்பளை பொலிசார் விசாரணை செய்தனர்.

சிங்களத் தொழிலாளர்கள் வசிக்கும்'லயன்'வீடுகள்மீது இ. தொ. கா. அங்கத்தவர்களால் ஒரு தடவை கற்கள் வீசப்பட்டனவென்றும் இதுபற்றி கம்பளை பொலிசுக்குத் தாம் புகார் செய்ததாகவும் சாட்சி ஜயவர்த்தனு கூறினர். கல்வீச்சின் காரணமாகக் காயமடைந்த ஆரியதாசா என்பவரைத் தோட்டத்துக்குச் சென்று தாம் பார்த்ததாக சாட்சி மேலும் தெரிவித்தார்.

### ஜி. ஜி.யின் குறுக்கு விசாரணை

இதன்பின் இ. தொ. கா. சார்பில் ஆஜரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி.: புகைப்படப் பிடிப்புத் தொழிலைவிட்டு ஒரு தொழிற்சங்க வாதியாக நீர் மாறியதன் காரணம் என்ன?

சாட்சி: தொழிலாளர்கள் என்னைக் கேட்டுக் கொண்டதால்.

ஜி. ஜி.: இலட்சுமித் தோட்டத் தொழிலாளர்கள் ஒருயூனியன் ஆரம்பிக்கவேண்டுமென்று உம்மைக்கேட்டதாகவும் நீர்ஒரு யூனியனை அமைக்கப் போவதாகவும் திரு. ஹார்லிக்கு எழுதினீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. திரு. ஹார்லியைச் சந்திக்க அனுமதி கேட்டீரா?

சாட்சி: ஆம்! அங்கத்தவர்கள் யூனியனில் சேர்ந்தபின் திரு. ஹார்லியைச் சந்தித்துப் பேசினேன்.

ஜி. ஜி.: எப்பொழுது?

சாட்சி: 1958-ம் ஆண்டில்.

ஜி. ஜி.: இ. தொ. கா. யூனியன்களைப் பற்றித் தொழிலாளர்கள் உம்மிடம் புகார் செய்து உம்மை ஒரு யூனியன் ஆரம்பிக்கும்படி கேட்டனர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: இது முதலாவது துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னரா அல்லது இரண்டாவது துப்பாக்கிச் சம்பவத்தின் பின்னரா?

சாட்சி: முதலாவது துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர்! தோட்டத்தை அடுத்த ரஸ்தாவில் ஒரு கூட்டமும் வைத்தேன்.

ஜி. ஜி: ஒலிபெருக்கியும் பாவித்தீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: ஒலிபெருக்கிக்காக திரு. ஹார்லி 35 ரூபாய் கொடுத்தாரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: கூட்டத்தில் யார் யார் பேசினர்கள்?

சாட்சி: நானும் மற்றும் இரண்டு பேரும் பேசினேம்.

ஜி. ஜி. ஒலிபெருக்கி உபயோகிப்பதற்கு பொலிஸில் அனுமதி கொடுத்தது யார்?

சாட்சி: கம்பளை பொலிஸ் அனுமதி கொடுத்தது. பெர்மிட் டிகளியார்கையொப்பமிட்டதென்பது என்னல் சொல்லமுடியவில்லை.

ஜி. ஜி.: திரு. ஹார்லியின் கையாள் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் ஆதரவிலுள்ள லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பிரதிநிதி திரு. நவரட்ணு கூறினர்?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: உம்மீது அப்படி ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரேராவுடன் நீர் பேசினீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: அவருடன் நீர் கடிதத் தொடர்பு கொண்டீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: எப்பொழுது?

சாட்சி: வில்லியம் மரணமான சமயத்தில்.

ஜி. ஜி.: உமது அங்கத்தவர்கள் சிலரைத் தங்களுடன் சேரும்படி இ. தொ. கா. அங்கத்தவர்கள் நிர்ப்பந்தப்படுத்தியதாக நீர் கூறினீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: இதுசம்பந்தமாக எந்த அதிகாரிக்காவது எழுத்து மூலம் நீர் புகார் செய்தீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: இது விஷயமாக உமது சொல்லைத்தான் நாம் நம்ப வேண்டும்

தோட்டத்திலிருந்து பின்ஹாமியை வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று திரு. ஹார்லியிடம் எஸ். எல். எப். பி. யூனியன் கோரவில்லையா?

சாட்சி: இல்லை.

தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்படுவதை திரு. ஆர். எஸ். பெல்பொலவிடமும் புகார் செய்திருக்கின்றேன்.

### உதவி பொலிஸ் அதிபர் சாட்சியம்

இதன்பின் உதவிப்பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. எர்னஸ்ட் பெரேராவை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்தார். கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு. **பெரேரா பின்வருமாறு தெரிவித்தார்:**

பொலிஸ் உத்தியோகஸ்தர் பாரபட்சமாக நடந்து கொண்டதாக நேரடியான குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை.

சாப்பாட்டுப் பணம் நிர்வாகத்தினல் கொடுக்கப்படுகிறதென்பது எனக்குத் தெரியும். தோட்டத்தில் நிரந்தரமாக அமைக்கப்பட்ட பொலிஸ் படையொன்றும் இல்லை. தோட்டத்துக்குச் சமீபத்திலுள்ள எந்தக் கடையிலாவது சாப்பாடு எடுக்க முயற்சி செய்யும்படி இலட்சுமித் தோட்டத்தில் கடமையாற்றிய பொலிசாருக்கு நான் கூறியிருந்தேன். பொலிசார் தங்கியிருப்பதற்கு வசதி செய்து கொடுக்கும்படியும் திரு. ஹார்லியை நான் கேட்டுக் கொண்டேன். பாடசாலைக் கட்டிடம், கணக்கப்பிள்ளையின் வீடு மற்றும் ஒரு கட்டிடம் ஆகியவற்றை திரு. ஹார்லி பொலிசின் உபயோகத்துக்குக் கொடுத்திருந்தார். சாப்பாடு சம்பந்தமாக திரு. ஹார்லி **பொடிசிங்கோவுடன் ஏற்பாடு செய்திருந்தார். சாப்பாடு சம்**பந்தமாக ஒழுங்கு செய்து கொடுக்கும்படி நான் திரு. ஹார்லியைக் கேட்கவில்லை. அவர் ஒழுங்கு செய்திருந்தார்.

### பொடி சிங்கோ பணம் கேட்டார்

இதன்பின் 3,115 ரூபாய்க்குப் பில் ஒன்றை பொடிசிங்கோ கொண்டு வந்தார் பொலிசாருக்கு தான் உணவு வழங்கியதாகவும் இதுவரை அதற்கான பணம் கொடுக்கப்படவில்லையென்றும் பொடிசிங்கோ கூறினர். பொலிசாருக்கு சாப்பாடு வழங்கும்படி திரு. ஹார்லி தன்னை ஒழுங்கு செய்த சமயம் பொலிசார் பணம் கொடுப்பார்களென்று திரு. ஹார்லி சொன்னதாகவும் பொடிசிங்கோ என்னிடம் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர்களுக்கு 6 ரூபாய் வீதமும் சார்ஜன்டுகளுக்கு 5ரூபாய் வீதமும் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு 3 ரூபாய் வீதமும் கணக்குப் போட்டு அவர்களுடைய சம்பளத்தில் அத்தொகையைக் கழித்து மொத்தம் 1200 ரூபாய் பொடிசிங்கோவிடம் கொடுக்கப்பட்டது.

திரு. பெரேரா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் இலட்சுமித் தோட்டத்தில் முதலாவது துப்பாக்கிப் பிரயோக சம்பவம் நடைபெற்ற பின்னரே திரு. ஹார்லியை தனக்குத் தெரியவந்ததென்ருர்.

"இதைத் தொடர்ந்து திரு. ஹார்லி இ. தொ. கா.வுக்கு எதிரானவர் என்பதை நான் அறிந்துகொண்டேன். இது விஷயத்தில் இதர தோட்டத்துரைகளிலிருந்து திரு ஹார்லி முற்றிலும் மாறுபட்டவர்" என்று திரு. பெரேரா கூறினர்.

"பொலிசாரின் சாப்பாட்டுச் செலவு சம்பந்தமாக பொடிசிங்காவுசகு கொடுக்கப்பட்ட பணத்தை திரு. ஹார்லி கேட்டுக் கொண்டதன் பேரில் பொலிசில் திரும்பிக்கொடுத்து விட்டார். அந்தப் பணத்தை தாம் கொடுப்பதாக திரு. ஹார்லி பொடிசிங்காவிடம் தெரிவித்திருந்தார். திரு. ஹார்லி எனக்கு டெலிபோன் செய்து பொலிசாரின் சாப்பாட்டுச் செலவை தாம் கட்ட முடியுமாவென்று கேட்டார். நான் இதுபற்றி பொலிஸ் சுப்ரின்டென்னிடம் ஆலோசனை கேட்டு விட்டு சாப்பாட்டுக்குரிய பணத்தை பொடிசிங்காவுக்கு கொடுப்பதற்கு திரு. ஹார்லிக்கு அனுமதி கொடுத்தேன்" என்று திரு. பெரேரா சொன்னர்.

இந் நிலையில் விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

---

## திருக்கேதீச்சரம்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

### விரிவுரையாளர்

*பலர் நியமிக்கப்பெறுவர்.*

*மானேஜர் - சேர் கந்தையா வைத்தியநாதன்.*

### ஏழு வருட பயிற்சிக்கான விபரங்கள்

I. பூசகர் பயிற்சி: 3 வருடம். தமிழ்-மொழியும் இலக்கணமும் திருமுறைகள், புராணங்கள் சித்தாந்த சாத்திரங்கள் (ஆரம்பம்.)

சமஸ்கிருதம்- மொழியும், இலக்கணமும், வேதபாராயணம், வேத ஆகமம்.(ஆரம்பம்)

ஆலயப் பூசை- திருக்கேதீச்சரம் கோவிலில் பயிற்சி (ஆரம்பம்)

ஆங்கிலம்—ஆரம்பப் பயிற்சி உலகப் பொது அறிவு.

II. ஆலய பூசைகளுக்கான பயிற்சி: முக்கியமான ஆலயத்தில் 2 வருடகால பயிற்சி. பூசை, கிரியாமுறை.

III. உயர்தரப்படிப்பு: 2 வருடம். சித்தாந்த சாத்திரங்கள், இந்து தத்துவ ஞானம், சகல வேதாகம கிரியாமுறைகள், ஆசார்ய அபிஷேகம்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மைதவறி நடுங்காதே,
பயத்தாலேதும் பயனில்லை;
யான்முன் உரைத்தேன்
கோடி முறை
இன்னும் கோடி முறை
சொல்வேன்
ஆன்மாவான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே"
—அமரகவிபாரதியார்.

---

## வாலிபர் தற்கொலை

இரத்தினபுரி, செவ்வாய்

யு. ஜி. பியசேனு என்னும் 21 வயதடைந்த வாலிபர் ஒருவர் காட்டுப்புறம் சென்று கழுத்தில் தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரியவருகிறது. ஆறும் நாள் கண்டுபிடிக்கப்பட்ட இவர் சடலத்தை இவரது வளர்ப்புத் தந்தை டபிள்யு. அமரிஸ் பொத்தேஜு ஆள் அடையாளம் கண்டுபிடித்தாராம்.

அமரிஸ் பொத்தேஜு சாட்சியமளிக்கையில் பியசேனு ஐந்துமாதக் குழந்தையாகவிருந்த காலத்தில் தொடக்கம் அவரைத் தாம் எடுத்து வளர்த்ததாகக் கூறினர்.

ஆறு மாதங்களுக்கு முன்பு பியசேனு மொரட்டுவைக்கு வேலை தேடிச்சென்ருர் என்றும் ஆனல் வேலை கிடையாது திரும்பினர் என்றும் தெரியவருகிறது.

பியசேனு ஒரு பெண்ணைக் காதலித்திருந்ததாகவும் ஏமாற்றம் கண்டதாகவும் தாம் அறிந்திருந்ததாக பொத்தேஜு கூறினர்.

---

## ஆசிரியர்களுக்கு விதிவிலக்கு அளிக்குமாறு கல்வி இலாகா வேண்டுகோள்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க சேவையாளர்களுக்கான 55 வயது இளைப்பாறும் விதி ஆசிரியர்களுக்கு விலக்கப்படல் வேண்டும் எனக் கல்வி இலாகா கோரியுள்ளது; திறைசேரிக்குக் கல்வி இலாகா அண்மையில் அனுப்பிய கடிதமொன்றில், விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கும், தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் 55 வயதுக் கட்டாய இளைப்பாறும் சட்டம் இவர்கள்மீது விதிக்கப்படக்கூடாது. என்று கூறப்பட்டுள்ளது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பத்திரம் பெற்ற ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோர்மீதும் இவ் விதியை விறக்கும்படி கல்வி இலாகா திறைசேரியைக் கேட்டுள்ளது. மேற் கூறப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரியத் தொழில் வல்லுனராகக் கொள்ளப்படவேண்டுமென்றும், விஞ்ஞான தொழில் **நுட்ப பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் விஞ்ஞான தொழில் நுட்ப ஊழியர்கள் எனக் கருதப்படல் வேண்டும் என வும் கல்வி இலாகா யோசனை** கூறுகிறது.

மேற்குறித்த ஆசிரியர் பிரிவுக்குள் வராத ஆசிரியர்களது வயதுக் கட்டுப்பாட்டில் கல்வி இலாகா ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இளைப்பாறும் சட்டத்தின் கீழ் தொழில் வல்லுனர் விஞ்ஞான தொழில் நுட்ப ஊழியர்களை விட வேறெந்தத் தொழிலாளரும் 55 வயதுக்குப்பின் வேலைபார்க்க முடியாது.

கல்வி இலாகாவின் மதிப்பீட்டின்படி 55 வயது இளைப்பாறும் சட்டம் ஆசிரியர்கள் மீது அமுல் செய்யப்பட்டால் 1,000 த்துக்கு அதிகமான கல்விப்பகுதி உத்தியோகஸ்தர்கள் பாதிக்கப்படுவர் எனத் தெரியவருகிறது.

---

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதி இ. போ. ச. ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினராக அண்மையில் நியமனம் பெற்றிருக்கும் தொல்புரம் திரு. எஸ். வைத்திலிங்கம் ஜே. பி., இ. போ. ச. அதிகாரிக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

பஸ் சாரதிகளுக்கும், கண்டக்டர்களுக்கும் பயிற்சிப் பாடசாலை அமைக்கப்படல் வேண்டும், கூடுதலான பஸ்கள் அவசியம், போக்குவரத்திற்கு ஏற்றவகையில் நேரசூசி அமைக்கப்படல் வேண்டும் என்ற பல யோசனைகள் இதிற் கூறப்பட்டுள்ளன.

# பொதுத் தேர்தலைப்பற்றி எண்ண இது நேரமல்ல

## நாட்டின் பொருளாதாரவளமேமுக்கியம்

### காலியில் என். எம். பேச்சு

காலி, செவ்வாய்

"கிரக நிலைப்படி பெப்ரவரி மாதம் 4-ந் திகதி ஒருபொதுத் தேர்தல் நடைபெறும் என்ற மயக்க நிலையில் திரு. டட்லி சேனநாயக்கா இருந்த போதிலும், பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறமாட்டாதென்றே அவர் துணிந்து கூறுவார்." இவ்வாறு காலி மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில், எட்டியாந்தோட்டை எம். பி.யும் லங்காசமசமாஜக்கட்சித் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்துக்கு பத்தேகம எம். பி. திரு. நீல் டி' அல்விஸ் தலைமை வகித்தார்.

டாக்டர் என்.எம். பெரேரா மேலும் கூறியதாவது:

"கிரக மாற்றத்தைப் பற்றியும் பொதுத் தேர்தலைப்பற்றியும் யோசிப்பதற்கு இது தருணமல்ல. நமது பொருளாதார பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு நாட்டினுடைய அரசாங்கத்துக்கு நிர்வாகத் திறமைதான் முக்கியமானது. ஆனல் இப்போதுள்ள எங்களது அரசாங்கமோ இந்நாட்டை சாதாரண தேநீர்க் கடை மாதிரி நடத்துகிறது. இதன் காரணத்தினால்தான் இந்தநாடு முன்னேற்றமடையாமலிருக்கிறது.

"பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று கடந்த 25 வருட காலமாக நாங்கள் கேட்டு வந்தோம். இதற்கிணங்க இப்பொழுது அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றிருந்த போதிலும் எல்லாம் குழப்பமாகவே இருக்கின்றன. ஆசிரியர்கள் கஷ்டமுறுகின்றனர். கிராமங்களிலுள்ள பாடசாலைக் கட்டடங்கள் உடைந்து விழும் நிலையில் இருக்கின்றது. கல்வியே பெரிய சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது.

உலகத்திலுள்ள ஏனைய நாடுகள் விதிக்கும் வரிகளிலும் பார்க்க நமது நாட்டு வரிவிகிதங்கள் உயர்வாகவே இருக்கின்றன. நடுத்தர வகுப்பினரை இவ்வரிகள்மூலம்பாதிக்கச் செய்யாது' முதலாளி வர்க்கத்தினருக்கு இவ்வரிகளை விதிக்கலாம். ஏனெனில் வருடமொன்றுக்கு 30 லட்சம் ரூபாய் செலுத்தக்கூடியவர்களும் இங்கு இருக்கிறார்கள்."


வருக! வருக!!

சுகாதாரத்துடனும் சுவைமிக்க காலைப் பலகாரம் காப்பியுடனும் இரவு, பகல், இரு வேளைகளிலும் விருப்பத்துக்குத் தகுந்தவாறு சைவம் அல்லது மீன் மாமிசத்தோடு ருசியான சாப்பாடு உண்டு.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**எஸ். எம்.**

**வைத்திலிங்கம்பிள்ளை**

408, மெயின் வீதி, மாத்தளை



**'சிரநேத்திராஞ்சன தைலம்'**

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்

வேண்டுமா ?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

**ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்**

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**மு. க. ஜெகநாதன்**

யூனனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்


# மானவாரி நிலங்களுக்கு வரி விதிக்கவேண்டாம்

அக்கரைப்பற்று, திங்கள்

நடப்புவருட வரவு செலவுத் திட்டத்தில் வயல் நிலங்களுக்கு வரவிருக்கும் வரியில் நீர்ப்பாசன வசதியில்லாது மழையை எதிர்பார்த்து நெற்சாகுபடி செய்யும் வயல் நிலங்களின்மீது வரிவிதிக்கும் முயற்சியைக் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை அக்கரைப்பற்று முதலாம் குறிச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கூட்டத்தில் ஜனப் மு. இ. அசனர்லெவ்வை கொண்டு வந்தார். பிரஸ்தாப தீர்மானத்தை ஜனப் சா. மா. முகமது முகைதீன் ஆமோதித்துப் பேசினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தீர்மானத்தைப் பிரதம மந்திரியின் கவனத்துக்கு அனுப்பிவைப்பதென்றும் அதன் பிரதி நிந்தாவூர் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் ஜனப் எம். ஐ. எம். அப்துல்மஜீதுவின் கவனத்துக்கு அனுப்புவதென்றும் இன்னுமொரு உப தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

# வலிகாமம் வடக்கு சில்லறை வியாபாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

"மக்களுக்கு வழங்கும் அத்தியாவசியமான பொருட்கள் எங்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. யாழ்ப்பாண பிரிவில் நாலிலொரு பகுதிக்கு எமது சங்கம் உணவுப் பொருட்களுடன் அத்தியாவசியப் பொருட்களையும் விநியோகம் செய்கின்றது.

மா, சீனி, கருவாடு, மைசூர் பருப்பு, தீப்பெட்டி ஆகியனவும் மற்றும் பல பொருட்களும் எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு இலகுவில் கிட்டுவதில்லை.

எனவே எங்களையும் உங்கள் வாடிக்கைக்காரர்களாகப் பதிவு செய்து தேவையான பொருட்களை நாங்களும் விநியோகிக்கத் தக்கவாறு தந்துதவவேண்டும்" என வலிகாமம் வடக்கு சில்லறை வியாபாரிகள் சங்கம் கூட்டுறவு மொத்த விற்பன அதிகாரிக்கும், பழை- உப. உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கும் அனுப்பிய மகஜர்கள் விண்ணப்பித்துள்ளது.

இது சம்பந்தமாக சுன்னகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுமார் 200 வியாபாரிகள் சமுகம் கொடுத்தனர்.

அவ்வமயம் உப-உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. க. சிவப்பிரகாசமும், உணவு சக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பொ. சேனதிராசாவும் கூட்டத்தில் பேசினர்.

கீழ்க் கண்டவாறு நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

க. பொன்னையா தலைவர். து. க. கனகராயர்–கா. ஆறுமுகம் உப தலைவர்கள். க. கதிரவேல்-கா.கார்த்திக்கேசு காரியதரிசிகள். சி. வைத்திலிங்கம் தனதிகாரி,

# 'விளையாட்டுப்போட்டி உள்ளப்பண்பை வளர்க்கிறது'

அச்சுவேலி, செவ்வாய்

"உள்ளப் பண்புகளை வளர்ப்பதில் விளையாட்டுப் போட்டி தன் முக்கிய இடத்தை வகிக்கின்றன. போட்டி பொறாமைகளை ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கவும் அவை ஏதுவாக அமைவதைக் காணலாம். தனக்கும் பிறர்க்கும் பிரயோசனமானவனாக வாழ்வதற்கு உடல் வலிமையையும் உள்ளப் பண்பையும் அளிக்கக்கூடிய இத்தகைய போட்டிகள் அடிக்கடி ஏற்படவேண்டும்."

இவ்வாறு அச்சுவேலி மடத்தடி கலாஜோதி சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்குத் தலைமைவகுத்துப் பேசிய வழக்கறிஞர் திரு. ஜி. வி. பாலசிங்கம் கூறினர்.

இந்த விளையாட்டுப் போட்டியில் ஜோதி இல்லம் 243 புள்ளிகளையும், கலா இல்லம் 210 புள்ளிகளையும் பெற்று ஜோதி இல்லம் இவ் வருடச் சாம்பியனில்லமாக வெற்றியீட்டியது.

விளையாட்டுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு திருமதி பாலசிங்கம் பரிசில்களையும் பத்திரங்களையும் வழங்கினர்.

மன்றத் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை நன்றியுரை கூறினர்.

---

# சனசமூக நிலையத்தில் பாரதி விழா

யாழ்ப்பாணம், புதன்

இராசசிங்கம் வீதியிலிருக்கும் பாரதி சனசமூக நிலையத்தில் நேற்று மாலை பாரதி விழாவை யாழ்ப்பாணம் நகர பிதா திரு. ரி. எஸ். துரைராஜா குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்துத் தலைமை தாங்கினர்.

அவர் தனது தலைமையுரையில் பாரதியின் பெருமையை மக்கள் அறிய வேண்டியது முதல் கடமையாகும் என்றும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து முற்போக்கான காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் கூறினர்.

அடுத்தபடியாக ஆசிரியர் திரு. ம. செ. அலெக்சாந்தர் பேசுகையில் சகோதரத்துவம் சமத்துவம் உள்ள மக்களாக நாம் எல்லோரும் வாழவேண்டும் என்றும், மனிதனை மனிதனாக மதிக்கும் எண்ணம் மக்கள் மனதில் உண்டாகவேண்டும் என்றும்-மனதில் உறுதியும்- வாக்கில் இனிமையும்- நினைவில் நல்லதும கொண்டு வாழும் வாழ்க்கை வளரவேண்டும் என்றும் அல்லல்கள் நீங்கி அமைதி பெருகி மனிதன் மனிதனாக மதிக்கப்படவேண்டும் என்றும் அதற்கு மாண்பு நிறைந்த வாழ்வு அவசியம் என்றும் கூறினர்.

அடுத்தபடியாக யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் திரு. எம். யேக்கப் பேசுகையில் பாரதி விழாக்கள்மூலம் பாரதியின் கொள்கைகள் பரப்பப்படவேண்டும் என்றும், அவரது கொள்கைகளை அமுல் நடத்த நாம் ஒவ்வொருவரும் முயலவேண்டும் என்றும் கூறினர்.

அடுத்து நிலையக் காரியதரிசி திரு. நீ. ஆசீர்வாதம் பாரதியின் கொள்கைகள்பற்றி பேசுவதிலும் அவரது திறன்களைக் கொண்டாடுவதிலும் நாம் என்றும் பெருமையடைகிறோம் என்றும் அவரது கொள்கைகளை நாம்கைக்கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

அடுத்து நிலையத் தனதிகாரி திரு. ஆ. சோமு பேசுகையில் பாரதியின் கோட்பாடுகளைக் கூறுவதிலும் பார்க்க அவைகளை நடைமுறையில் காட்டுவதுதான் சிறந்தது என்று கூறினர்.

ஆசிரியர் திரு. செ. ப. ஜீவானந்தம், பாரதி பாரதி என்று கோஷமிட்டு, பாரதிபக்தர்களாகச் சொல்லளவில் மட்டுமிருந்து செயலளவில் எதையும் காட்டாவிட்டால் அதில் பயனில்லை என்றும் கூறினர்.

# 'வீண்பொழுது போக்காமல் தையல்வேலை செய்யுங்கள்'

## பெண்களுக்கு மந்திரி அறிவுரை

மாத்தறை, செவ்வாய்

"இலங்கைப் பெண்கள் வீண்பொழுதுபோக்குவதையே விரும்புகிறார்கள். தையல் வேலைகளில் பெண்கள் அதிகம் ஈடுபட்டு உழைப்பார்களானல் தமது பொருள் வருவாயை அதிகரித்துக்கொள்வதுடன் நாட்டிற்கும் சேவை செய்வதாகும்.

இவ்வாறு தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா மாத்தறை ரகுலாக் கல்லூரியில் தையல் கைப்பணிப் பொருட்காட்சியொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

மாத்தறை மாவட்டக் குடிசைக் கைத்தொழில் அதிகாரி திரு. ஈ. ஜயசேகரா பேசுகையில், தையல் தொழிலினல் பெரும் பணக்காரர்களாகிவிட முடியாதெனினும்மேற்கொண்டு அதில் பெருமையடைய வேண்டியது பெண்கள் கடமையெனக் கூறினர்.

கூட்டுறவு முறையில் தையல் தொழில் அமைக்கப்படுமாயின் பெருந்தொகையான பெண்கள் தொழில் செய்வதற்கு அது வாய்ப்பளிக்கும் என்று தையல் கைப்பணிப் பரிசோதகர் செல்வி நிலங்கா கூறினர். கிழித்த உடைகளைத் திருத்தி அமைப்பதனல் அதிக பணம் வீண் போகாது பார்த்துக்கொள்ளலாம் எனவும் அவர் கூறினர்.

மாத்தறை அரசாங்க அதிபர் திரு. ஏ. எஸ். நவரத்தினராஜா தலைமை வகித்தார்.

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி தராதரப் பத்திரங்களை வழங்கினர். செல்வி நிலங்கா பரிசுகளை வழங்கினர்.

---

# முள்ளியவளைக்கு பிரசவ ஆஸ்பத்திரி

## மாவட்ட இணைப்புக் கமிட்டி தீர்மானம்

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவு மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டம் கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரி திரு. மா. நடராஜா தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வைத்திய சுகாதாரம்

முள்ளியவளைகரு ஒரு பிரசவ ஆஸ்பத்திரியும், முல்லைத்தீவுக்குச் சத்திர சிகிச்சை வசதியும, குழந்தைகள் ஆஸ்பத்திரியும் நிறுவப்படவேண்டும்.

வற்றப்பளைக் கிராமத்துக்கு ஓர் உபதபாற்கந்தோர் நிறுவுவதுடன், இப்போது இடவசதிக் குறைவான வாடகைக் கட்டடத்தில் இருக்கும் முல்லைத்தீவு தபாற்கந்தோருக்கு நிரந்தரமான கட்டடம் நிறுவவேண்டும். நவீன தொலைபேசி வசதிகளும் அங்கு அமைக்கப்படவேண்டும்.

நாயாற்றுக்குப் பாலம் போடவேண்டும். மீன்பிடி ஆராய்ச்சிப பயிற்சி நிலையம் நிறுவப்படல் வேண்டும்.


**குனேகா செண்டுகள்**

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார்

மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

**ஜெகஜோதி அன் கோ,**

குருதெனியா.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**புதன் 13-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை 8-00 ஜலதரங்கம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் விருப்பம், 5-30 பாலர்பாட்டு, 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-15 பாமாலை, 7-30 புல்லாங்குழலும் கிளாரினட்டும், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 விவாதமேடை, 9-45 லலிதா செல்வரத்தினம் – பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சாலியமங்கலம் ஆர். வி. சுந்தரம்ஜயர் - வீணை.

பகல் 12-03 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-15 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-00 சென்னை அஞ்சல், 7-45 'தாமரைப் பொய்கை' - நாடகம், 8-00 சாலியம்ங்கலம் ஆர்.வி.சுந்தரம் ஐயர் - வீணை, 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல், 9-50 இசைமாலை.

## பர்மாவில் வெள்ளக் கொடுமை

### 2 லட்சம் மக்கள் அவதி

ரங்கூன் செப். 12

பர்மாவில் மிக மோசமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் சுமார் இரண்டு லட்சம் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுகிறது. 900 வீடுகள் அழிந்துவிட்டனவாம்.

## இங்கிலாந்து செல்லும் முதலாவது மௌலவி

அக்கரைப்பற்று, திங்கள்

மௌலவி ஒருவர் முதல் தடவையாக ஸ்கொலர்ஷிப்பில் செல்லும் பாக்கியத்தை அட்டாளைச்சேனை இஸ்லாமிய ஆசிரிய கலாசாலையின் போதனாசிரியராக இருந்துவரும் ஜனாப். எம். எம். அப்துல் வதூத் மௌலவி பெற்றுள்ளார்.

ஜனாப் அப்துல் வதூத் மௌலவி கேம்பிரிட்ஜ்பல்கலைக் கழகத்தில் ஒரு வருடகாலம் பயிற்சிபெறுவதற்காக பிரிட்டன் வழங்கியுள்ள ஸ்கொலர்ஷிப்பில் இம்மாதம் 15-ந்திகதி இங்கிலாந்து செல்லவிருக்கும் ஜனாப் அப்துல்வதூத் மௌலவி அட்டாளைச்சேனை இஸ்லாமிய ஆசிரியகலாசாலையில் அரபி, இஸ்லாமிய சரித்திரம், தமிழ் இலக்கியம், சரித்திரம் பாலர் வகுப்புப் போதனா முறைகள் ஆகிய பாடங்களின் போதனா ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.

## 'சேர். இராமநாதன் வழியில் சென்றவர் திரு. கந்தையா'

### திரு. பீட்டர் கெனமன் பாராட்டு

உடுப்பிட்டி, செவ்வாய்

"இந் நாட்டில் சகல இனங்களின ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப சேர் பொன். இராமநாதன் சென்ற உயர்ந்த பாதையில் தான், பொன். கந்தையாவும் பின் தொடர்ந்து சென்றார். திரு கந்தையா மறைந்தாலும் அந்த உயர்ந்த இலட்சியம் மறையாது".

இவ்வாறு சனிக்கிழமை பிற்பகல் நெல்லியடி இலட்சுமித் தியேட்டரில் நடைபெற்ற கந்தையா நினைவு விழாவில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான திரு. பீட்டர் கெனமன் கூறினார்.

"திரு. கந்தையா ஒரு பாராளுமன்றப் பிரதிநிதிக்கு உரைகல்லாகவும், எடுத்துக் காட்டாகவும் வாழ்ந்ததுடன், தனது தொகுதி மக்களுக்கு மட்டுமன்றி, பிற தொகுதி மககளுக்கும் பணி புரிந்தவர். பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த முதல் இலங்கைத் தமிழர் என்ற புகழும் கந்தையாவுக்கே உரியது" என்று திரு. கெனமன் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கொழும்பு பொது நூல் நிலையத்தைச் சீர்திருத்தியமைத்ததுடன் இலங்கைப் பல்கலைக்கழகச் சீர்கேடுகளை அம்பலமாக்கி அவற்றை நிவர்த்தித்த புகழும் அவரதே. மேலும், தமிழ்ப்பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் இடதுசாரிப் பிரதிநிதியான கந்தையாவின் வரவு—செலவுத் திட்ட பேச்சுகள் இன்றும் அர்த்த புஷ்டியுள்ளவையாக விளங்குகின்றன".

திரு. ஏ. வைத்தியலிங்கம் பேசுகையில், கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வகுப்புவாதப் பாதையிலிட்டுச் செல்லப்பட்டனரென்றும், அக்கசப்பான வரலாற்றில் ஒரு திருப்பத்தை 1956ம் ஆண்டு திரு. கந்தையா ஏற்படுத்திப் புதிய பாதையைத் தமிழ் மக்களுக்குக் காட்டினரென்றும் கூறினார்.

நியாய துரந்தரர் திரு. எல். ஜெயசிங்கத்தின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம், சைவப் புலவர் எஸ். வல்லிபுரம், ஆசிரியர் திரு. நவரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## கிழக்கிலங்கை சிங்கள ஆசிரியசங்கக் கூட்டம்

அக்கரைப்பற்று, திங்கள்

"கிழக்கிலங்கையிலுள்ள அரசினர் முஸ்லிம் பாடசாலைகளில் எஸ். எஸ். ஸி. தராதரங்களோடு உதவி சிங்கள ஆசிரியர்களாகக் கடமையாற்றிவருபவர்களின் உயர்தரக்கல்வி சம்பந்தமான பயிற்சி வகுப்புகளோ, விடுமுறைக்கழகங்களோ இதுவரைக்கும் நடைபெற்றதாக இல்லை. தற்போது சுமார் 125 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடந்த நான்கு வருடங்களுக்குமேல் கடமையாற்றிக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் ஆசிரிய கலாசாலைக்குப் பரீட்சையில்லாது பிரவேசிப்பதற்கு விசேஷ சலுகையளிக்க வேண்டும்" என்று கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று அக்கரைப்பற்றில் சனிக்கிழமைகாலை நடைபெற்ற கிழக்கிலங்கை உதவி சிங்கள ஆசிரிய சங்கக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதுசம்பந்தமாக அடுத்த வாரத்தில் திருக்கோணமலைப் பகுதிக்கு விஜயம் செய்யும் கல்வி மந்திரியைப்பேட்டி கண்டு பிரஸ்தாபிப்பதற்கும் ஒரு கமிட்டி தெரிவு செய்யப்பட்டது.

## வான்சேவையை தேசியமயமாக்குக

### கமிஷனரிடம் கருத்து வெளியீடு

கொழும்பு, செவ்வாய்

தனிப்பட்ட வான் சேவையைத் தேசியமாக்குவதன் மூலமே இ. போ. ச.வின் பஸ் சேவை நஷ்டமின்றி இயங்கரிடியுமென இ. போ. ச. நிர்வாகம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிஷனிடம் திரு. எஸ். ஸ்ரீவர்தன கருத்து தெரிவித்தார்.

சமஸ்த லங்கா மோட்டார் சேவக சமித்தியைச் சேர்ந்த திரு. எஸ். ஸ்ரீவர்தன மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பிலிருந்து கண்டி, காலி போன்ற தூர இடங்களுக்குச் செல்வதாகாக வேகமாகச் செல்லக்கூடிய பஸ்களை விடுதல் நல்லது.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




## இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.



தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.




## "மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

# மேலும் 26 பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தது

## ஆசிரிய பணிபுரியும் மதகுருமாரின் நிலைமை

### கல்வி மந்திரி இவ்வாரம் தீர்மானிப்பார்

**கொழும்பு, செவ்வாய்**
**வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ளபாடசாலைகளில்மேலும் 26 பாடசாலைகளை' அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ளது. கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள விசேஷ 'கஸட்' அறிவித்தலில்' இவ்விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுவரை நூற்றிப்பதினொரு (111) பாடசாலைகளை அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்துள்ளது.

இப்பொழுதும் எடுக்கப்பட்ட 26 பாடசாலைகளில் கிண்ணியா, தாமாரவல்லி, ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை, திருக்கோணமலை, ஸ்ரீ சண்முக வித்தியாலய மகளிர் ஆங்கில பாடசாலை, அநுராதபுரம் ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை ஆகியவைகளும் அடங்கும்.

**மதகுருக்கள் நிலை என்ன?**

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி போதிக்கும் மதகுருக்களின் எதிர்காலம் என்ன என்பதை கல்வி அமைச்சர் இவ்வாரத்துக்குள் முடிவு செய்வார்.

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழுள்ள பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதும் அங்கு கடமையாற்றும் மதகுருமாரையும் சேவைக்கு எடுத்துக்கொள்வதா? என்ற பிரச்சினை எழுந்துள்ளது.

மதகுருமார்களை அரசாங்க சேவைக்கு இனிமேல் எடுக்கக்கூடாதென்று அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்துள்ளது.

பாடசாலைகளை அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்ட பின்னரே ஆசிரியர்கள் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களாகக் கணிக்கப்படுவார்கள்.

—

## நடுத்தர வகுப்பினருக்கு தென்னை பயிரிட காணி

### விவசாய அமைச்சின் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

வருட மொன்றுக்கு ரூ. 24,000 வருமானமாகப் பெறும் நடுத்தர வகுப்பினருக்கு தென்னை பயிரிடுவதற்காக முடிக்குரிய காணி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான திட்ட அமைப்பு வேலைகளை நில, நீர்ப்பாசன அமைச்சு கவனித்து வருகிறது.

ஒவ்வொரு குடியேற்ற வாசியும் 25 எக்கர் நிலம் பெறுவர். இந்த நிலம் காணிக் கச்சேரிதள்மூலமே வழங்கப்படும். அடுத்த ஏப்ரல் மாதம் இக்குடியேற்ற வாசிகள் தமக்கு வழங்கப்பட்ட காணிகளில் குடியேற வேண்டும்.

மொனராகலை, வவனியா, மன்னார், புத்தளம், இரத்தினபுரி, திருக்கோணமலை, மாத்தளை, அம்பாறை, பொலநறுவை ஆகிய இடங்களில் தென்னை பயிரிடுவதற்கேற்ற இடத்தைத் தமக்குத் தெரிவிக்குமாறு விவசாய நீர்ப்பாசன மந்திரி விவசாய இலாகாவைக் கேட்டுள்ளார்.

இவ்விதம் நடுத்தரவகுப்பினருக்கு காணி கொடுப்பதால் அவர்களுக்கு இது ஒரு முதலீடாக உதவுவதோடு விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புக்களும் அளிக்கப்படுகின்றன. ஏனெனில் நடுத்தர வகுப்பினர் இந்தக் காணிகளைத் திருத்திப் பயிரிடுவதற்கு இவர்களையே வேலைக்கமர்த்துவார்களென இந்தத் திட்டத்தின் நன்மை பற்றிக் குறிப்பிடுகையில் மந்திரி தெரிவித்தார்.

---

**வேதாகம சாஸ்திர பாடசாலை ஆரம்பவிழா**

அகில இலங்கை சைவசமயக் குருக்கள்மார் சபையின் ஆதரவில் இவ் விழா 14-9-61 வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சொர்ணமாளிகையில் (264) ஆரம்பமாகும். சமுகமளிக்கவும். **க. கணேசக்குருக்கள்**, காரியதரிசி.

---

## செங்குந்தா இந்துக்கல்லூரி தீப்பற்றியதால் பெரும் சேதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்று மாலை செங்குந்தா இந்துக்கல்லூரி கட்டடங்களில் தீப்பற்றியதால் பள்ளிக்கூடத்துக்கு அதிகம் சேதமுண்டாகியுள்ளது. ஆரம்ப பாடசாலை நடாத்தப்பட்டு வந்த,ஓலையால் வேயப்பட்டிருந்த இருகட்டடங்களும் ஓட்டினால் வேயப்பட்டிருந்த பிரதான கட்டடத்தின் ஒருபகுதியும் தீக்கிரையாயின. பொலிஸார் உடனடியாக அங்கு சென்று தீயை அணைக்க முயற்சித்தனர். தண்ணீர் கிடைக்காத காரணத்தால் தீயை அணைக்க முடியாது போயிற்று. பள்ளிக்கூடத்திற்குப் பெரும் சேதம் விளைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி முனிசிபல் எல்லையில் அமைந்துள்ள இப்பள்ளிக்கூடத்தில் 1000 த்துக்கு மேலான பிள்ளைகள் பயின்று வருகிறார்கள். இங்கு கடமையாற்றும் 52 ஆசிரியர்களுள் பெரும்பாலானோர் பட்டதாரிப் பெண்கள்.

பள்ளிக்கூடம் தீப்பற்றியதை யிட்டுப் பள்ளிக்கூட அதிபர் திரு. என். கணபதிப்பிள்ளை எவரையும் சந்தேகிப்பதாகத் தெரியவில்லை. பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள வீட்டுப் பிள்ளைகள் பட்டாசுகொளுத்தி விளையாடியதாகவும் அவ்வெடிகளிலிருந்து பறந்த நெருப்புப் பொறிகளினாலே கட்டடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டிருக்கவேண்டும் என்றும் கருதப்படுகிறது.

பிள்ளைகளுக்கான கட்டட வசதிகள் வேறு ஏற்படுத்திக் கொள்ளும்வரை பள்ளிக்கூடம் மூடப்பட்டிருக்கும் எனத் தெரியவருகிறது. பள்ளிக்கூடத் தீவிபத்துப் பற்றிப் பொலிஸ் புலன் விசாரணை நடாத்திவருகிறது.

—

## உத்தியோகப் பற்றற்ற பார்வையாளர்கள்

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் செனட்டர்கள் ஆகியோரை உத்தியோக பூர்வமில்லாத பார்வையாளர்களாக வர்த்தக மந்திரி நியமித்துள்ளார்.

தமது அமைச்சின் கீழுள்ள சகல ஸ்தாபனங்களுக்கும் முக்கியமாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் உணவு இலாகாவுக்கும் விற்பனவு இலாகாவுக்கும் சென்று இவர்கள் பார்வையிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## உணவுப்பொருள்களின் விலையைகுறைக்கவேண்டும் கி. ச. தீர்மானம்

பெந்தோட்டை, செவ்வாய்

'சீனி, மாவு ஆகிய உணவுப் பொருள்களின் விலையை அரசாங்கம் உடனடியாகக் குறைக்கவேண்டும்' என்ற ஒரு தீர்மானம் வெய்ஹேனக் கிராமச் சங்கத்தின் கடைசி மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. கூட்டத்திற்கு கிராமச் சங்கத்தலைவர் திரு. ஜே. ஓ. கஜநாயக்கா தலைமை வகித்தார்.

—

## மன ஒற்றுமை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைத் திறந்துவைத்துப் பேசும்போது தெரிவித்தார்.

அவர் இ. போ. ச. தலைவர் திரு. ஆர்.டி.டி.சில்வா, உபதலைவர் திரு. ஆர். நமசிவாயம் ஆகியோர் சகிதம் அங்கு சென்றபோது டிப்போ மனேஜர் திரு. ஆர். நாகரத்தினமும் சக ஊழியர்களும் உற்சாகமான வரவேற்பளித்தனர்.

அமைச்சர் ஓய்வு விடுதியைத் திறந்துவைத்து மேலும் பேசும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கு இருக்கும் இ. போ. ச. டிப்போக்களை ஒரேயிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கப்படவிருக்கிறது. நகரிலுள்ள பலாலி வீதி இரண்டாம் கட்டையடியில் அந்த டிப்போ நிறுவப்படவிருக்கிறது. அவ்வாறு ஒன்றாக இணைக்கப்படுவதால் இங்கு பஸ் போக்குவரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வசதி அதிகரிக்கும். தற்போது இங்கு பாவிக்கப்பட்டு வரும் பஸ் வண்டிகளை நல்ல நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை கையாளப்படும்."

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

நானும் உங்களில் ஒருவன் என்ற உணர்ச்சி மனதில் உதிக்கக்கூடிய அளவுக்கு என்னைப் பெருந்தன்மையோடு வரவேற்றிருக்கிறீர்கள். யாழ்ப்பாணத்து மக்களில் ஒருவனாகவே என்னைக் கருதிக் கொள்கிறேன். இத்தகைய மன ஒருமைப்பாட்டினால் தான் நாடு சுபீட்சமடைய முடியும் என்பதை எவரும் மறுக்கவே முடியாது.

அமைச்சர்கிழக்குடிப்போவுக்குப் போனபோது அதன் மனேஜரான திரு. ஆர். ராசேந்திரன் வரவேற்றார். அவர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணத்தைவிட்டுத் திரும்பினார்.

---

## "கலை என்பது இறக்குமதி சரக்கல்ல"

### கலை மன்ற அத்திவார விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், செவ்வாய்

"கலை என்பது புதிதாகப் பிறஇடத்திலிருந்து வரவழைக்கப்படும் சரக்கல்ல. இளமையிலேயே நாம் எமது மூதாதையர் கையாண்ட கலை நுணுக்கங்களைக் காலத்திற்கேற்றதாயும், யாவராலும் பாராட்டக் கூடியதாகவும் அமைத்து, பழமையையும் புதுமையையும் தராசுமுனையில் வைத்துச் சரி பார்த்தும் செயற்படுத்தியும் பழகுவதிற்றான் எமது சொந்தக் கலைகளின் விருத்தி தங்கியிருக்கிறது. இதே நோக்கத்திற்காக எமது கலைகளை விருத்தி செய்வதற்குத் தமக்கென ஓர் ஆய்வுகூடத்தை நிறுவ, நடனங்கள் மூலம் பணம் சேர்த்தும், தனவந்தர்களின் உதவியோடும் இம்மன்றத்தினர் ஆரம்பித்திருப்பதை நினைத்து மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றம் ஆற்றவிருக்கும் கலை அபிவிருத்தி எத்தகைமைவாய்ந்தது என்பது புலனாகிறது" என மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத்தினரின் காரியாலயத்தையும் மண்டபத்தையும் நிறுவுவதற்கான அத்திவாரக்கல் நாட்டு விழாவிற்குத் தலைமை வகித்த திரு. பெ. வீரசிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் இம்மன்றத்தினருக்குக் கூட்டம் அமைக்க இடம் அளித்ததோடு, அத்திவாரக்கல் நாட்டி ஆசீர்வாதமும் செய்தார்.


சுகாதாரத்திற்கு — சுவையான ஆகாரத்திற்கு

**தாமோதர விலாஸ்**

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்
விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் உன்னத திரை ஓவியம்
வெற்றிகரமான 2-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)
நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மோடர்ன் (பதுளை)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலிட

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

**பாவ மன்னிப்பு**

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30க்கும்
சனி, ஞாயிறு பிற்பகல் 2-30க்கு மெற்னி
ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி நடித்த **கைராசி**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.